கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை மார்ச் / ஏப்ரல் 2010 ரூபாய் 15/–








## மும்பை யாருக்குச் சொந்தம்?

## ஸ்ரீ இராம நவமி




**தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 2

மார்ச் / ஏப்ரல் 2010



4
ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் வாழ்க்கையும் கொள்கைகளும்




12
ஸ்ரீ இராம நவமி



17
யாருக்குச் சொந்தம்?



22
அவதாரம்



25
மதுராவில் வசித்தல்

2 உங்களின் வரிகள்

10 ரதயாத்திரை, சென்னை

11 ரதயாத்திரை, கோயம்புத்தூர்

16 கீதை காட்டும் பாதை, திருச்சி

20 கோவில் கட்டுவது ஏன்?

28 மூளையற்ற சமுதாயம்

30 47 கோடி புத்தகங்கள்

31 விஞ்ஞானிகளும் தவறிழைக்கக்கூடிய மனிதர்களே

31 கௌடிய வைஷ்ணவ நாள்கட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்கள்




# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.

**தலைமை:** விஜய கோவிந்த தாஸ்
**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்
**பிழைத் திருத்தம்:** சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்
**தட்டச்சு உதவி:** விசித்ரா
**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவன்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073. போன்: (044) 22272920

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** கலர் பிரிண்டர்ஸ், சென்னை.



**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.



**நன்றி:** பக்தி விகாஸ் அறக்கட்டளை (இராமாயண வரைபடங்களுக்காக)

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை





## பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்

ஒவ்வொரு கட்டுரையும் அற்புதம், தமிழக இஸ்கான் கோவில்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்துகொள்வதில் பெரும் மகிழ்ச்சி. ஒட்டுமொத்தமாகச் சொன்னால், மொத்த புத்தகமும் மிகவும் அருமையாக, பல்வேறு தகவல்களின் பொக்கிஷமாக விளங்குகின்றது. அனைத்து பத்திரிகைகளையும் பாது காத்து வைத்தல் மிகவும் அவசியம் என்னும் எண்ணத்தை வலுவூட்டு கின்றது. இந்த அற்புதமான தன்னலம் கருதாத தொண்டிற்கு மிக்க நன்றி. ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மேலும் பல நபர்களைச் சென்றடைய என்னால் முடிந்த முயற்சியை மேற்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

திருப்பதி, தாமோதர தேசம், துபாய்
(மின்னஞ்சல் மூலமாக)

## மகிழ்ச்சி, பெரு மகிழ்ச்சி

எங்கள் அனைவரின் நீண்ட நாள் ஏக்கம் நிறைவேறி வருவது கண்டு மிக்க மகிழ்ச்சி. விரைவில் மாதந்தோறும் வெளிவர இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. முதல் இதழ் பெரும் மகிழ்ச்சியை அளித்தது, இரண்டாம் இதழோ அதைக் காட்டிலும் மெருகேற்றப்பட்டிருந்தது. மூன்றாம் இதழ் மேன்மேலும் வளர்ச்சி பெற்றுள்ளது. வார்த்தைகளால் வர்ணிக்க இயலவில்லை, இதழ்கள் தொடர்ந்து தடையின்றி வருவதற்கு கிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றேன். மிக்க நன்றி.

இராமசந்திரன், சேலம்

## புத்தகங்கள் வாங்க பேராவல்

எத்தனையோ ஆன்மீக இதழ்களை எத்தனையோ முறை வாங்கியுள்ளேன், படித்துள்ளேன், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் கையில் கிடைக்கும் வரை ஒருநாளும் உண்மையை அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை, உண்மையின் அருகில்கூட சென்ற உணர்வு இல்லை. பிரபுபாதரின் உபன்யாஸங்களில் காணப்படும் தெளிவு, வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அவரின் இதர புத்தகங்களை வாங்கிப்

படிக்க வேண்டும் என்று பேராவல் கொண்டுள்ளேன்.

பழனியப்பன், நஞ்சங்குளம், நெல்லை மாவட்டம்

## வண்ணமயமாகக் காண ஆவல்

நீண்ட நாள்களாக ஆங்கிலத்தில் வெளிவந்த Back to Godhead பத்திரிகை தற்போது தமிழில் வெளிவருவது, ஆங்கிலம் அறிந்துகொள்ள முடியாததால் பத்திரிகையை படிக்க முடியவில்லையே என ஏங்கும் அனைவருக்கும் கிடைத்திருக்கும் மிகச்சிறந்த நல்வாய்ப்பாகும். அற்புதமாக வெளிவரும் இப்பத்திரிகை ஆன்மீக அறிவினை துல்லியமாகவும் தெளிவாகவும் வழங்குகின்றது. தமிழில் இப்பத்திரிகை வெளிவர வேண்டும் என்று இங்கு வசிக்கும் தமிழர்கள் அனைவரும் நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்துள்ளோம். இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர அருள்புரியும்படி நான் ஸ்ரீல பிரபுபாதரிடம் பிரார்த்தனை செய்கிறேன். பௌதிகவாதத்தைப் பரப்பும் எத்தனையோ பத்திரிகைகள் வண்ணமயமான விதத்தில் அச்சடிக்கப் படுகின்றன. ஆனால் இத்தகு அற்புதமான பத்திரிகையோ கருப்பு வெள்ளையில் அச்சடிக்கப்படுவது குறைபாடாக உள்ளது.

நிர்மல் குமார், ஜுரிச், சுவிட்சர்லாந்து (மின்னஞ்சல் மூலமாக)

**எமது பதில்:** தமிழகத்தை விட்டு பல மைல் தொலைவில் வசிக்கும் தங்களின் பாராட்டுதலுக்கும் உற்சாகத்திற்கும் மிக்க நன்றி. பல்வேறு பக்தர்களின் நீண்ட கால ஆவலை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எம்மைப் போன்ற சிலரை கருவியாகக் கொண்டு தற்போது நிறைவேற்றி வருகிறார். விரைவில் வண்ணமயமான விதத்தில் அச்சடிப்பதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும், ஸ்ரீல பிரபுபாதரின் கருணையினால் அது சாத்தியமாகும் என நம்புகிறோம்.

## கிருஷ்ணரை சூரியனுடன் ஒப்பிடுவதா?

தமிழ் பேசும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை, ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் தற்போது நிறைவேற்றி வருவது கண்டு மிக்க மகிழ்ச்சி. ஒரே ஒரு கேள்வி: பத்திரிகையின் தலைப்பில், "கிருஷ்ணர் சூரியனுக்கு சமமானவர்..." என்று எழுதப்பட்டுள்ளது. முழுமுதற் கடவுளான கிருஷ்ணரை சூரியனுக்கு ஒப்பிடுதல் தவறன்றோ?

லோக பந்து தாஸ், கீழ்கட்டளை, சென்னை

**எமது பதில்:** கிருஷ்ணரை சூரியனுக்கு ஒப்பிடுவது ஓர் உருவக அணியாகும். சூரியன் ஒளியை வழங்கி இருளைப் போக்குவதைப் போல, கிருஷ்ணர் ஞானத்தை வழங்கி மாயை என்னும் இருளை அகற்றிவிடுகிறார் என்பதே இதன் பொருள். இஃது எம்மால் உருவாக்கப்பட்ட உருவக அணி அல்ல; மாறாக,

*க்ருஷ்ண--ஸூர்ய-ஸம; மாயா ஹய அந்தகார*
*யாஹாங் க்ருஷ்ண, தாஹாங் நாஹி மாயார அதிகார*

என்று பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு (சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலை 22.31) அருளிய வாக்கியத்தின் மொழி பெயர்ப்பாகும். *க்ருஷ்ண ஸூர்ய-ஸம* என்னும் வங்காள வாக்கியம், கிருஷ்ணர் சூரியனுக்கு சமமானவர் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இஃது ஓர் உருவக அணி என்பதால், இதில் எந்தவொரு தவறும் கிடையாது. இதே உருவகத்தை ஸ்ரீல பிரபுபாதர், ஆங்கிலத்தில் Godhead is light என்று மொழிபெயர்த்தார்; இதனால் ஸ்ரீல பிரபுபாதர் மாயாவாதத்தை ஆதரிக்கின்றார் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. உருவகத்தை உருவகமாக மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

இருப்பினும், பல்வேறு நபர்கள் இதே கேள்வியை கேட்கும் காரணத்தினாலும், கலி யுகத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் உருவகங்களை புரிந்துகொள்வ தில்லை என்ற காரணத்தினாலும், இந்த இதழிலும் இனிவரும் இதழிலும், "கிருஷ்ணர் சூரியனுக்கு சமமானவர்..." என்பதை "கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர்..." என்று மாற்றியுள்ளோம்.

**குறிப்பு:** குறிப்பிட்ட தகவல்கள் ஏதுமின்றி, எளிமையான விதத்தில், நன்றி தெரிவிக்கும்படியான பல்வேறு கருத்துகள், இடவசதியின் பொருட்டு இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன. பாராட்டு தெரிவித்து உற்சாகமளித்த அனைத்து ஆன்மீக அன்பர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி.

ஸ்ரீ கிரிதாரி தாஸ், தொகுப்பாசிரியர்

## தங்களது கேள்விகளும் கருத்துகளும்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் மூலம் தங்களுக்கு ஏற்பட்ட மாற்றத்தையும், எங்களுக்கு கடிதம் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவியுங்கள்.

**கடிதம் எழுதுவதற்கான முகவரி:**

தொகுப்பாசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்,
பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை,
மனை எண் 9-10, செந்தில் அவன்யூ,
காமராஜபுரம், செம்பாக்கம்,
சென்னை - 600073

தொலைபேசியின் மூலம் கருத்து சொல்ல: 91596 39306

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்




பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், கலி யுக தர்மத்தைப் பரப்ப ஸ்ரீ சைதன்யராக அவதரித்தார். அவரது சரிதத்தை "ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் வாழ்க்கையும் கொள்கைகளும்" [Śrī Caitanya Mahāprabhu: His Life and Precepts] என்ற தலைப்பில் ஸ்ரீல பக்திவினோத தாகூர், ஆங்கிலத்தில், ஆகஸ்ட் 20, 1896ல் சிறிய கட்டுரையாக வெளியிட்டார். அக்கட்டுரை ஸ்ரீல பிரபுபாதரால் எழுதப்பட்ட Teachings of Lord Caitanya (விரைவில் தமிழில் வெளிவரவிருக்கும் "ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் போதனைகள்") என்னும் புத்தகத்தில் அறிமுகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து சில பகுதிகள்...

## சைதன்யரின் தோற்றம்

ஸகாப்த வருடம் 1407, பல்குன மாதத்தின் 23ம் நாளின் (கி.பி. 1486, பிப்ரவரி 18) மாலை வேளையில் சூரியன் மறைந்த சற்று நேரத்தில், சைதன்ய மஹாபிரபு நாதியா மாவட்டத்திலுள்ள மாயாப்பூரில் தோன்றினார். சந்திர கிரஹணத்தின் போது அவர் பிறந்தார், இதுபோன்ற சூழ்நிலைகளில் வழக்கமாக நடைபெறுவதுபோல, அவர் பிறந்தபோதும் நாதியாவின் மக்கள் பாகீரதியில் நீராடியபடி ஹரிபோல் என்று உற்சாகமாக முழங்கிக் கொண்டிருந்தனர். அவரது தந்தை, வேத கலாசாரத்தைச் சார்ந்த ஏழை பிராமணரான ஜகந்நாத மிஸ்ரர்; அவரது தாய் சசீ தேவியோ எடுத்துக்காட்டாய் விளங்கும் நல்ல மங்கை; இவர்கள் இருவருமே சில்லட் நகரில் வசித்து வந்த பிராமண குடும்பத்தின் வழிவந்தவர்கள். அழகிய குழந்தையான மஹாபிரபுவைக் காண நகரத்தின் பெண்கள் தங்களது பெற்றோர்களுடன் வந்தனர். இவரது தாத்தாவும் (தாயின் தந்தையான) பிரபல ஜோதிடருமான பண்டிதர் நீலாம்பர சக்ரவர்த்தி அவர்கள், இக்குழந்தை வருங்காலத்தில் ஒரு மஹாபுருஷராக வருவார் என்பதை முன்னுரைத்தார்; மேலும், அதன் காரணத்தினால் குழந்தைக்கு விஷ்வம்பரர் என்று பெயர் சூட்டினார். அவரது பொன்னிற மேனியைக் கண்ட அக்கம்பக்கத்துப் பெண்கள் அவரை கௌரஹரி என்று அழைக்க, அவரது தாயோ வேப்ப மரத்தின் (நிம்ப மரத்தின்) அடியில் பிறந்ததால் அவரை நிமாய் என்றும் அழைத்தார்...

## குழந்தைப் பருவ லீலைகள்

அவர் தனது தாயின் கரங்களில் சிறு குழந்தையாக இருந்தபோது இடைவிடாது அழுவார் என்றும், அப்போது அக்கம்பக்கத்திலுள்ள பெண்கள் ஹரிபோல் என்று சப்தமிட அவர் தனது அழுகையை நிறுத்திவிடுவார் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அவ்வீட்டில் ஹரிபோல் என்னும் முழக்கம் எப்போதும் இருந்து வந்தது, இந்த காவிய நாயகனின் வருங்கால பணியை அது முன்னறிவித்தது... தனது தீர்த்தயாத்திரையின் போது அவரது வீட்டிற்கு விருந்தினராக வந்த ஒரு பிராமணர், உணவைச் சமைத்து, தியானித்தபடி கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்தார். அச்சமயத்தில் அங்கு வந்த குழந்தை நிமாய் அந்த

சாதத்தை சாப்பிட்டார். குழந்தையின் செயலால் திகைப்புற்ற பிராமணர், ஜகந்நாத மிஸ்ரரின் வேண்டுகோளின்படி மீண்டும் சமைத்தார். பிராமணர் அந்த சாதத்தை கிருஷ்ணரை தியானித்தபடி நைவேத்யம் செய்ய, மீண்டும் அதனை நிமாய் சாப்பிட்டார். மூன்றாவது முறையாகச் சமைக்கும்படி பிராமணர் வேண்டுகோள் விடுக்கப்பட்டார். இம்முறை வீட்டிலுள் ளோர் அனைவரும் உறங்கிவிட, தானே கிருஷ்ணர் என்பதை அந்த யாத்திரி கருக்குக் காண்பித்து, நிமாய் அவரை ஆசிர்வதித்தார். தான் வழிபடும் தெய்வமே தன்முன் தோன்றியதைக் கண்ட பிராமணர் பரவசத்தில் மூழ்கினார்...

## கல்வி

எட்டு வயதில், மாயாப்பூருக்கு அருகிலிருந்த கங்காநகரத்தில் கங்காதாஸ பண்டிதர் நடத்திவந்த பள்ளியில் அவர் சேர்க்கப்பட்டார். இரண்டு வருடத்தில் அவர் சமஸ்கிருத இலக்கணத்திலும் அலங்காரத்திலும் வல்லுநரானார். அதன் பின்னர் அவரது கல்வி பெரும்பாலும் சுயக்கல்வியாக அவரது வீட்டிலேயே அமைந்தது, பண்டிதராகத் திகழ்ந்த தனது தந்தைக்குச் சொந்தமான பலப் புத்தகங்களை அவரால் அங்கு படிக்க முடிந்தது. புகழ்பெற்ற பண்டிதரான ரகுநாத சிரோமணியிடம் பாடம்பயின்ற தனது நண்பர்களுடன் போட்டியிட்டபடி, அவர் ஸ்மிருதியையும் நியாயத்தையும் தானாகவே பயின்றார் என்று தெரிகின்றது.

பத்து வயதிற்குப் பின், சைதன்யர் இலக்கணம், அலங்காரம், ஸ்மிருதி, நியாயம் ஆகியவற்றில் மதிக்கத்தக்க பண்டிதரானார். இதன் பின்னர், அவரது மூத்த சகோதரரான விஷ்வரூபர் வீட்டை விட்டு வெளியேறி துறவறம் பூண்டார். சைதன்யர் இளவயதுச் சிறுவனாக இருந்த போதிலும், ''இறைவனைத் திருப்திப்படுத்தும் எண்ணத்துடன் உங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறி தனது பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறினார். இதன் பின்னர், குறுகிய காலத்திலேயே அவரது தந்தையும் இவ்வுலகினை விட்டுச் சென்றுவிட்டார். தாய் மிகவும் துயரத்திற்குள்ளாக, தனக்கே உரிய திருப்தியுற்ற தோரணையுடன் தனது விதவைத் தாய்க்கு ஆறுதல் கூறினார்.

## திருமணம்

பதினான்கு அல்லது பதினைந்து வயதின்போது, அதே நாதியாவைச் சார்ந்த வல்லபாசாரியரின் மகளான லக்ஷ்மிதேவியை மஹாபிரபு திருமணம் செய்தார். நியாயக் கொள்கைகளுக்கும் சமஸ்கிருதக் கல்விக்கும் புகழ்பெற்ற ஸ்தலமான நாதியாவில், மிகச்சிறந்த பண்டிதர்களில் ஒருவராக அவர் அச்சமயத்தில் அறியப்பட்டார்... கிழக்கு வங்காளத்தில் அவர் வசித்த காலத்தில், அவரது மனைவி லக்ஷ்மிபிரியா பாம்பு கடித்ததால் இவ்வுலகினை விட்டுச் சென்றாள். வீடு திரும்பிய அவர், தனது தாய் வருத்தம் தோய்ந்த மனதுடன் இருப்பதைக் கண்டார். மனித வாழ்வின் நிச்சயமற்ற தன்மையைப் பற்றிய நீண்ட உரையின் மூலம் தனது தாய்க்கு ஆறுதல் கூறினார். தாயின் வேண்டுகோளுக்கிணங்கி, ராஜ பண்டிதர் ஸநாதன மிஸ்ரரின் மகளான விஷ்ணுபிரியாவை அவர் திருமணம் செய்து கொண்டார்.

## மாபெரும் பண்டிதர்

கிழக்கு வங்காளத்தில் குறுகிய காலத்தை கழித்துவிட்டு திரும்பிய அவருடன் அவரது நண்பர்கள் இணைந்து கொண்டனர். இச்சமயத்தில் இவர் நாதியாவிலேயே மிகச்சிறந்த பண்டிதராக அறியப்பட்டார். மாபெரும்திக்விஜயராகத்தன்னைத் தானே கூறிக்கொண்ட காஷ்மீரைச் சார்ந்த கேசவ காஷ்மீரி என்பவர் நாதியாவிலுள்ள பண்டிதர்களுடன் விவாதிக்கும் பொருட்டு அங்கு வந்தார். பெயரளவு வெற்றியுடன் விளங்கும் பண்டிதரைக் கண்ட பயத்தில், நாதியாவில் பாடசாலை வைத்திருக்கும் பண்டிதர்கள் அனைவரும் தங்களுக்கு வேறு இடத்திலிருந்து அழைப்பு வந்துள்ளதாக சாக்குச் சொல்லி ஊரை விட்டுச் சென்று விட்டனர். மாயாப்பூரிலுள்ள பரோகோன-காட் என்னுமிடத்தில் கேசவர் மஹாபிரபுவை சந்தித்தார், குறுகிய வாதத்திற்குப் பின், அவர் இந்த இளைஞனிடம் தோற்றுப் போனார். அவ மானத்தினால் ஊரை விட்டு ஓடிப் போனார். தற்போது நிமாய் பண்டிதர் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிதராக உருப்பெற்றார்.



## ஆன்மீக தீட்சை

16 அல்லது 17 வயதின்போது அவர் தனது மாணவர்கள் சிலருடன் கயாவிற்குச் சென்றார், புகழ்பெற்ற மாதவேந்திர பூரியின் சீடரும் வைஷ்ணவ சந்நியாசியுமான ஈஷ்வர பூரியிடமிருந்து ஆன்மீக தீட்சையை அங்கு ஏற்றுக் கொண்டார். நாதியாவிற்குத் திரும்பிய நிமாய் பண்டிதர், ஒரு மத போதகராக உருவெடுத்தார். சைதன்யர் பிறப்பதற்கு முன்பே வைஷ்ணவ கொள்கைகளை



கேசவ காஷ்மீரி, நிமாயுடன் வாதம் செய்த காட்சி



ஏற்றிருந்த அத்வைத பிரபுவும் ஸ்ரீ வாஸரும் இந்த இளைஞனின் மாற்றத்தைக் கண்டு ஆச்சரியமடையும் அளவிற்கு அவரது மாற்றம் பலமாக இருந்தது. அதன் பின்னர் அவர் ஒரு வாதமிடும் பண்டிதராகவோ, சண்டையிடும் ஸ்மார்தராகவோ, குற்றங்களைச் சுட்டிக் காட்டும் அலங்கார வித்வானாகவோ இருக்கவில்லை. கிருஷ்ணரின் திருநாமத்தை உச்சரித்து பரவசத்தில் மூழ்கியவராகத் திகழ்ந்தார், பக்திப் பரவசத்தின் தாக்கத்தினால் உற்சாகமடைந்த நபராக விளங்கினார். ஸ்ரீவாஸ பண்டிதரின் வீட்டில் தனது நூற்றுக்கணக்கான சகாக்களின் மத்தியில் (அவர்களில் பெரும்பாலானோர் நன்கு கல்விகற்ற பண்டிதர்கள்), அவர் தனது அதிஅற்புத சக்திகளை வெளிப்படுத்தியதை நேரில் கண்ட முராரி குப்தர் அந்நிகழ்ச்சியை விவரித்துள்ளார். அச்சமயத்தில்தான் அவர் தனது நெருங்கிய சகாக்களுடன் ஸ்ரீவாஸ பண்டிதரின் வீட்டினுள் இரவு நேர கீர்த்தன பள்ளியைத் தொடக்கினார். அங்கு அவர் பிரச்சாரம் செய்தார், பாடினார், ஆடினார், தனது எல்லாவித தெய்வீக உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தினார்…



## பிரச்சாரம்

நித்யானந்த பிரபுவிற்கும் ஹரிதாஸ தாகூருக்கும் அவரளித்த முதல் கட்டளை: "நண்பர்களே, செல்லுங்கள்! நகரத்தின் வீதிகளுக்குச் செல்லுங்கள், வீடுவீடாகச் சென்று ஒவ்வொரு மனிதனையும் சந்தியுங்கள், அவனை தூய வாழ்வுடன் ஹரியின் திருநாமத்தைப் பாடச் சொல்லுங்கள், பின்னர் தினசரி மாலை நேரத்தில் உங்களது பிரச்சாரப் பணியின் பலன்களை எனக்குத் தெரிவிப்பீராக." இக்கட்டளையைப் பெற்ற இரண்டு பிரச்சாரகர்களும் அதனை தினமும் நிறைவேற்றினர். ஒருமுறை ஜகாய், மதாய் என்னும் இரண்டு வெறுக்கத்தக்க நபர்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. மஹாபிரபுவின் கட்டளையைக் கேட்ட அவர்கள் இரண்டு பிரச்சாரகர்களையும் அவமதித்தனர், இருப்பினும் பகவான் அளித்த பக்தியின் போதனைகளால் கவரப்பட்டு விரைவிலேயே மாற்றப்பட்டனர். இதனால் ஆச்சரியமுற்ற நாதியாவின் மக்கள், "நிமாய் பண்டிதர் ஒரு மிகச்சிறந்த பண்டிதர் மட்டுமல்ல, அவர் நிச்சயமாக வல்லமை பொருந்திய கடவுளால் அனுப்பப்பட்ட தூதரே," என்று கூறினர். அத்தருணத்திலிருந்து தனது இருபத்திமூன்று வயது வரை அவர் தனது கொள்கைகளை நாதியாவில் மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள இதர கிராமங்களிலும் நகரங்களிலும் பிரச்சாரம் செய்தார். தன்னைப் பின்பற்றுவோரின் இல்லங்களில் அவர் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார், பக்தியின் அந்தரங்க கொள்கைகளைக் கற்றுக் கொடுத்தார், மேலும், இதர பக்தர்களுடன் சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டார். நாதியா நகரத்திலிருந்த அவரது தொண்டர்கள் ஹரியின் திருநாமத்தை கடைவீதிகளிலும் இதர வீதிகளிலும் பாடத் தொடங்கினர். பரபரப்பை ஏற்படுத்திய இந்நிகழ்ச்சி பல்வேறு பகுதிகளில் பல்வேறு விதமான எண்ணங்களை எழுப்பியது. பக்தர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர், ஸ்மார்த பிராமணர்களோ நிமாய் பண்டிதரின் வெற்றியினால் பொறாமை கொண்டு, சைதன்யரின் குணம் இந்துக்களைப் போன்று அல்ல என்று சந்த் காஜியிடம்

குற்றம் சாட்டினர். ஸ்ரீவாஸ பண்டிதரின் வீட்டிற்கு வந்த காஜி அங்கிருந்த மிருதங்கத்தை உடைத்து அறிவித்தார்: ''நிமாய் பண்டிதர் தனது விசித்திரமான மதத்தை பிரச்சாரம் செய்வதை கைவிடவில்லையெனில், அவரின் மீதும் அவரைப் பின்பற்றுபவர்களின் மீதும் இஸ்லாமிய மதத்தை திணிக்க வேண்டியிருக்கும்.'' இச்செய்தி மஹாபிரபுவிடம் தெரிவிக்கப்பட, நகர மக்கள் ஒவ்வொருவரும் கையில் தீப்பந்தத்துடன் மாலை வேளையில் கூடுமாறு அவர் கட்டளையிட்டார். அவர்கள் அவ்வாறு கூடியபோது 14 குழுக்களாகப் பிரிந்து ஸங்கீர்த்தனம் செய்தபடி பேரணி ஒன்றை அமைத்தார். காஜியின் வீட்டை அவர் அடைந்தபோது, காஜியுடன் நீண்ட விவாதம் நிகழ்த்தினார், இறுதியில் காஜியின் உடலைத் தொட்டு தனது வைஷ்ணவ கருத்தை அவரது இதயத்தினுள் தெரிவித்தார். கண்ணீர் வடித்த காஜி, பலமான ஆன்மீகத் தாக்கத்தை தான் உணர்ந்ததாகவும், அதன் காரணத்தினால் தனது சந்தேகங்கள் அனைத்தும் தெளிவுபெற்று தன்னுள் ஒரு மத எழுச்சியும் மிகவுயர்ந்த பரவசமும் ஏற்பட்டன என்று ஒப்புக் கொண்டார். பின்னர் காஜியும் சங்கீர்த்தன குழுவில் இணைந்து கொண்டார். பெருமானின் ஆன்மீக சக்தியைக் கண்டு உலகமே வியந்தது. இந்த நிகழ்ச்சிக்கு பின்னர், முரண்பட்ட கருத்துடைய நூற்றுக்கணக்கானோர் மாற்றப்பட்டு விஷ்வம்பரரின் கொடியின் கீழ் இணைந்தனர்.

## சந்நியாசம்

...ஒரு குறிப்பிட்ட குடும்பம், ஜாதி, இனம் ஆகியவற்றுடன் தனக்குள்ள தொடர்பை துண்டித்துவிட்டு, உலகத்தின் குடிமகனாக ஆவதற்கு உறுதி பூண்டார்; இந்த தீர்மானத்துடன் தனது 24வது வயதில், கட்வாவிலிருந்தகேசவபாரதியின் வழிகாட்டுதலின்படி அவர் சந்நியாச ஆஸ்ரமத்தை ஏற்றுக் கொண்டார். அவரது தாயும் மனைவியும் அவரது பிரிவிற்காக கதறி அழுதனர், ஆனால் நமது நாயகனோ, மென்மையான இதயம் கொண்டவர் என்றபோதிலும் தனது கொள்கையில் பலமாக இருப்பவர் ஆயிற்றே. அவர் குடும்பம் என்னும் சிறிய உலகினைத் துறந்து, கிருஷ்ணரின் எல்லையற்ற ஆன்மீக உலகத்திற்காக பொதுமக்களுடன் சேர்ந்தார்.

சந்நியாசம் ஏற்ற பின்னர், சாந்திபூரில் உள்ள அத்வைத பிரபுவின் இல்லத்திற்குச் செல்லும்படி அவர் தூண்டப்பட்டார். தனது நண்பர்களையும் மரியாதைக்குரியவர்களையும் அழைத்த அத்வைதர், சசீதேவியையும் அழைத்து அவளது மகனைப் பார்க்கும் வாய்ப்பை வழங்கினார். தனது மகனை சந்நியாசியின் தோற்றத்தில் கண்டபோது, அவளது இதயத்தில் இன்பமும் துன்பமும் கலந்தோடின. சந்நியாசி என்பதால், கிருஷ்ண சைதன்யர் ஒரு கோவணமும் வெளியாடையும் (பஹிர்வாஸ்) மட்டுமே உடுத்தியிருந்தார். அவரது தலையில் முடி இல்லை, கைகள் சந்நியாச தண்டத்தையும் (குச்சியையும்) கமண்டலத்தையும் தாங்கியிருந்தன. அத்திருமகன் தனது தாயின் பாதங்களில் விழுந்து, ''தாயே! இந்த உடல் தங்களுடையது, நான் தங்களின் கட்டளைகளுக்கு பணிய வேண்டும். எனது ஆன்மீக இலக்கை






காஜியுடன் நிமாய் நடத்திய உரையாடலின் காட்சி



அடைவதற்காக நான் விருந்தாவனம் செல்ல எனக்கு அனுமதி கொடுங்கள்'' என்று கேட்டார். அத்வைதருடனும் மற்றவர்களுடனும் ஆலோசித்த தாய், தனது மகனை ஜகன்னாதரின் இருப்பிடமான பூரியில் தங்கும்படி வேண்டினாள், அதன் மூலம் அவரைப் பற்றிய தகவல்களை அவ்வப்போது அவள் பெற முடியும். அப்பரிந்துரையை ஏற்றுக் கொண்ட மஹாபிரபு சில தினங்களில் சாந்திபூரி லிருந்து ஒரிஸா நோக்கிப் புறப்பட்டார்...

## ஸார்வபௌமருடன் வாதம்

பூரியை அடைந்து ஜகந்நாதரைக் கோவிலில் கண்ட அவர், அதன் பின்னர் ஸார்வபௌமரின் வேண்டுகோளுக்கு இணங்கி அவருடன் தங்கினார். ஸார்வபௌமர் அக்காலத்தின் மாபெரும் பண்டிதர், அவரது கல்விக்கு எல்லையே இல்லை. அச்சமயத்தில் அவரே மிகச்சிறந்த நையாயிகர் (நியாய சாஸ்திர வல்லுநர்), மேலும், சங்கராசாரியர் கற்பித்த வேதாந்த கொள்கையில் மிகவும் தேர்ந்த பண்டிதராக அறியப்பட்டார்... சந்நியாசியின் அழகைக் கண்டு ஆச்சரியமுற்ற ஸார்வபௌமர் இந்த இளைஞரால் தனது வாழ்நாள் முழுவதும் சந்நியாச ஆஸ்ரமத்தை தக்க வைத்துக் கொள்வது கடினம் என்று அஞ்சினார். மஹாபிரபுவை நாதியாவில் இருக்கும்போதே அறிந்திருந்த கோபிநாதர், அவர் மீது கொண்ட மிகுந்த மரியாதையினால் இந்த சந்நியாசி சாதாரண மனிதனல்ல என்று அறிவித்தார். இக்கருத்தில் கோபிநாதருக்கும் ஸார்வபௌமருக்கு மிடையில் சூடான விவாதம் எழுந்தது. பின்னர், தன்னிடமிருந்து வேதாந்த சூத்திரங்களைக் கேட்கும்படி ஸார்வபௌமர் மஹாபிரபுவிடம் வேண்டு கோள் விடுக்க, அவர் மௌனமாக சம்மதித்தார். மிகச்சிறந்த ஸார்வபௌமர் ஏழு நாள்கள் கம்பீரத்துடன் உரைத்த விஷயங்களை சைதன்யர் மௌனமாகக் கேட்டார். அதன் இறுதியில், ஸார்வபௌமர், ''கிருஷ்ண சைதன்யரே! என்னுடைய பாராயணத்தையும் விளக்கவுரையையும் கேட்ட தாங்கள் ஏதும் கூறாது இருப்பதால், தங்களுக்கு வேதாந்தம் புரியவில்லை என்று நான் நினைக்கிறேன்'' என்று கூறினார். தான் சூத்திரங்களை மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டதாகவும், ஆனால் சங்கராசாரியர் அளித்த விளக்கவுரையை புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் சைதன்யர் பதிலளித்தார். இதனால் ஆச்சரியமுற்ற ஸார்வபௌமர், ''அஃது எப்படி? சூத்திரங்களின் அர்த்தங் களைப் புரிந்துகொண்ட தாங்கள் அந்த சூத்திரங்களை விளக்கும் வியாக்கியானத்தைப் புரிந்துகொள்ள வில்லையா? நன்று! சூத்திரங்களைத் தாங்கள் புரிந்துகொண்டீர்கள் எனில், தங்களது வியாக்கியானத்தை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்,'' என்று கூறினார். அதன் பின்னர், மஹாபிரபு எல்லா சூத்திரங்களையும் தனது சொந்த வழியில்சங்கரரின்அத்வைதஉரையைத் தொடாமல் விளக்கினார். சைதன்யர் வழங்கிய விளக்கங்களில், மெய்பொருள், அழகு, வாதங்களுக்கு இடையே இருந்த பொருத்தம் ஆகியவற்றை ஸார்வபௌமர் நன்கு புரிந்து கொண்டார், அவ்விளக்கங்கள், பிரம்ம சூத்திரங்களை இவ்வளவு எளிமையாக விளக்கக்கூடிய நபரை தற்போதுதான் முதன்முதலில் காண்பதாக அவரை ஒப்புக்கொள்ள



ஸ்ரீ சைதன்யருக்கு ஸார்வபௌமர் வேதாந்தம் கற்றுக் கொடுத்த காட்சி

வைத்தன. மேலும், வேதாந்த சூத்திரத்திற்கு மஹாபிரபுவிடமிருந்து பெற்ற விளக்கங்களை போன்ற இயற்கையானவிளக்கங்களைசங்கரரின் வியாக்கியானம் ஒருபோதும் வழங்கிய தில்லை என்றும் ஏற்றுக் கொண்டார். பின்னர், மஹாபிரபுவின்தொண்டராகவும் அவரது கருத்துக்களை முன்னுரைப்ப வராகவும் ஸார்வபௌமர் மாறினார். குறுகிய நாள்களில் அவர் அக்காலத்தின் மிகச்சிறந்த வைஷ்ணவர்களில் ஒருவரானார். இச்செய்தி வெளியில் வர, ஒரிஸா முழுவதும் கிருஷ்ண சைதன்யரின் புகழ் பாடப்பட்டது, நூற்றுக்கணக்கானோர் அவரிடம் வந்து அவரைப் பின்பற்றுபவர்களாக மாறினர். அச்சமயத்தில் தென்னிந்தியா செல்ல விரும்பிய மஹாபிரபு, கிருஷ்ண தாஸ் என்ற பிராமணருடன் புறப்பட்டார்.

## தென்னிந்திய பயணம்

...முதலில் கூர்மக்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு வாஸுதேவர் என்ற குஷ்டரோகியை குணப்படுத்தி மஹாபிரபு அதிசயம் நிகழ்த்தினார். வித்யாநகரத்தின் ஆளுநரான இராமானந்த ராயரை கோதாவரிக் கரையில் சந்தித்து, அவருடன் பிரேம பக்தியைப் பற்றிய தத்துவ உரையாடலை அவர் மேற்கொண்டார். தசரதரின் மகனான இராமச்சந்திரர் மாவீரன் வாலியைக் கொல்வதற்காக அம்பெய்திய ஏழு பனை மரங்களைத் தொட்டு அவற்றை உடனடியாக அங்கிருந்து மறையச் செய்து மற்றுமொரு அதிசயத்தை நிகழ்த்தினார். அவர் தனது பயணம் முழுவதும் வைஷ்ணவ தர்மத்தையும் நாம சங்கீர்த்தனத்தையும் பிரச்சாரம் செய்தார். மழைக்காலத்தைக் கழிப்பதற்காக ஸ்ரீரங்கத்தில் வேங்கடபட்டர் என்பவரின் வீட்டில் நான்கு மாதங்கள் தங்கினார். அக்குடும்பம் முழுவதையும், வேங்கடரின் பத்து வயது மகனான கோபாலன் உட்பட அனைவரையும் அவர் இராமானுஜ வைஷ்ணவத்திலிருந்து கிருஷ்ண பக்திக்கு மாற்றினார். பின்னர் விருந்தாவனத்திற்கு வந்த கோபாலன், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் கீழ் தொண்டாற்றிய ஆறு கோஸ்வாமிகளில் ஒருவரானார்... கன்னியாகுமரி வரை தென்னிந்தியாவில் பயணம் செய்த சைதன்யர் பீம நதிக்கரையிலுள்ள பண்டரிபூரின் வழியாக இரண்டு வருடத்தில் பூரிக்குத் திரும்பினார்... தனது பயணத்தின் போது, அவர் புத்தமதவாதிகள், ஜைனர்கள், மற்றும் மாயாவாதிகளை பல்வேறு இடங்களில் சந்தித்து, தன்னை எதிர்த்தவர்களை வைஷ்ணவ தர்மத்திற்கு மாற்றினார்...

## லீலைகளின் முடிவு

முப்பத்தி ஒன்றாம் வயதிலிருந்து, நாற்பத்தி எட்டு வயதில் டோடா கோபிநாத் கோவிலில் நடைபெற்ற சங்கீர்த்தனத்தின் உச்சத்தில் மறையும் வரை, மஹாபிரபு தொடர்ந்து காசி மிஸ்ராவின் வீட்டில் பூரியிலேயே வசித்தார். இந்த பதினெட்டு வருடங்களில் அவரது வாழ்க்கையில் அன்பும் பக்தியும் நிலை நாட்டப்பட்டிருந்தது. அவரைப் பின்பற்றிய எண்ணிலடங்காதோர் அவரைச் சுற்றி இருந்தனர். அவர்கள் அனைவரும் மிகவும் உயர்ந்த வைஷ்ணவர்கள்; தங்களது தூய்மையான நடத்தை, கல்வி, திடமான மதக் கொள்கைகள், மற்றும் ராதா-கிருஷ்ணரின் மீதான ஆன்மீக அன்பின் மூலம் அவர்கள் பொதுமக்களிடமிருந்து தனித்து விளங்கினர்.





குஷ்டரோகத்தினால் துன்பப்பட்ட வாசுதேவரை குணப்படுத்திய காட்சி

# எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை—

## வலியுறுத்திய ஸ்ரீ ஜகந்நாதரின் ரதயாத்திரை, சென்னை



ஜனவரி 13, 2010. இஸ்கான் சென்னை கிளையின் சார்பாக 27ம்வருடஸ்ரீஜகந்நாதர்ரதயாத்திரைமிகவும்பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது. புவி வெப்பமடைவதைக் குறைப்பதற்கான ஒரு படியாக "எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனையும்" என்ற தலைப்பில் இத்திருவிழா நடத்தப்பட்டது.

ரதயாத்திரையின் துவக்க விழா நிகழ்ச்சி மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்குப் பின்புறம் நடைபெற்றது. காவல்துறை டிஐஜி திரு.சக்திவேல் IPS, மியூசிக் அகாடமியின் காரியதரிசியான முனைவர். பப்பு வேணுகோபால் ராவ், இஸ்கானின் மூத்த சந்நியாசிகளான தவத்திரு பானு ஸ்வாமி, தவத்திரு பக்தி விரஜேந்திர நந்தன ஸ்வாமி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மயிலாப்பூரில் இருந்து சேத்துபட்டு வரை கிருஷ்ண பக்தர்களின் பரவசமூட்டும் ஹரி நாம சங்கீர்த்தனத்துடன் அழகிய ரதத்தில் பகவான் ஸ்ரீ ஜகந்நாதர், தனது சகோதரர் பலராமர் மற்றும் சகோதரி சுபத்ரையுடன் கம்பீரமாக பவனி வந்தார். நிகழ்ச்சியை விளக்கும் பிரசுரங்களும் ஸ்ரீ ஜகந்நாதரின் பிரசாதமும் வீதியெங்கும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு பரவலாக விநியோகிக்கப்பட்டன. தெருக்கள் தூய்மைப்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டன; வண்ணக் கோலங்கள் சென்னைக்கு அழகூட்டின.

துவக்க விழாவில் தவத்திரு பானு ஸ்வாமி அவர்கள் பேசியவற்றிலிருந்து சில துளிகள்:

ஸ்ரீமத் பாகவதத்தின்படி பூமிக்கும் தர்மத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அரசாங்கத்தின் கட்டளைகளை குடிமக்கள் மீறும்போது நாடு துன்பப்படுவதைப் போல, கடவுளின் கட்டளைகளை மக்கள் மீறும்போது பூமி துன்பப்படுகின்றது. உலகில் நடைபெறும் கொடூரமான செயல்கள் பூமியை பாதிப்பதால், அவள் தனது வளங்களை மறைத்துக் கொள்கிறாள், அதனால் மோசமான காலநிலை ஏற்படுகின்றது. புவி வெப்பமடைவதால் நாம் மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாகவும் தொழிற்சாலைகளே அதற்குக் காரணம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆயினும், இப்பிரச்சனைக்கு ஸ்ரீமத் பாகவதத்தின்படி, மிகச்சிறந்த தீர்வு என்னவெனில், பூமியை வஞ்சிக்கும் தன்மையிலிருந்து மக்களை திருத்த வேண்டும், அவர்களது சுயநல எண்ணங்களை கைவிடச் செய்வதற்கு ஆன்மீகப் பயிற்சி அவசியம். தற்போதைய கலி யுகத்தில், பகவான் சைதன்யர் கற்றுக்கொடுத்தபடி பகவானின் திருநாமங்களை உச்சரிப்பதன் மூலம், ஆன்மீக நிலையை எளிதில் அடைய முடியும்.

இஸ்கான் சென்னை கிளையின் தலைவரான அருட்திரு சுமித்ர கிருஷ்ண தாஸ் அவர்கள் பேசுகையில், 'எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனையும்' என்னும் சொற்றொடர் இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதரால் வடிவமைக்கப்பட்டது என்றும், உலகெங்கிலும் பல்வேறு பண்ணை நிலங்களின் மூலம் இஸ்கான் இதனை நிறைவேற்றி வருகின்றது என்றும் குறிப்பிட்டார். மேலும், சோழிங்கநல்லூரில் ECR சாலையில் கட்டப்பட்டுவரும் கோவிலில் ஏற்கனவே கோசாலைகள் அமைக்கப்பட்டு, பசுக்களை பராமரித்து பூமியை பாதுகாப்பதை நடைமுறையில் செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.



**மேலே:** ஆனந்த கீர்த்தனத்தில் திளைக்கும் பக்தர்கள்

**இடது மேலே:** மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் முன்பு பிரம்மாண்டமாக நிற்கும் ஸ்ரீ ஜகந்நாதரின் ரதம்

# கோயம்புத்தூரை குலுக்கிய ஸ்ரீ ஜகந்நாதரின் ரதயாத்திரை



அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் கோயம்புத்தூர் கிளையின் சார்பில் கடந்த ஜனவரி மாதம் 16ம் நாள், 18ம் வருட ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை திருவிழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஜகந்நாதர், பலதேவர் மற்றும் சுபத்ரையின் விக்ரஹங்கள், தேர்முட்டியிலுள்ள வேணுகோபால சுவாமி திருக்கோவிலின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த பிரம்மாண்டமான 42 அடி உயர ரதத்திற்கு பல்லக்கில் கொண்டு வரப்பட்டனர்.

தமிழகத்திற்கான இஸ்கான் ஜிபிஸி தவத்திரு பானு ஸ்வாமி, இஸ்கான் கோயம்புத்தூர் கிளையின் தலைவரான தவத்திரு பக்தி வினோத ஸ்வாமி, இஸ்கான் பரோடா கிளையின் தலைவரான அருட்திரு பாசுகோஷ் தாஸ், இஸ்கான் சென்னைக் கிளையின் தலைவரான அருட்திரு சுமித்ர கிருஷ்ண தாஸ், குமுதம் ஜோதிடத்தின் ஆசிரியரான திரு. A.M. ராஜகோபால் ஆகியோரின் முன்னிலையில், மாநகர மேயரான திரு. வெங்கடாசலம் நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார்.

மதியம் 3 மணிக்கு தேர்முட்டியில் தொடங்கிய ரதயாத்திரை, ராஜா தெரு, ஒப்பணக்கார வீதி, வைசியாள் தெரு, மற்றும் K.G. தெருவின் வழியாக மீண்டும் தேர்முட்டியை வந்தடைந்தது. வருடந்தோறும் நடைபெறும் இந்த ரதயாத்திரை நிகழ்ச்சி மக்கள் அனைவருக்கும் பகவானை தரிசிப்பதற்கான ஒரு நல்வாய்ப்பாக அமைகின்றது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும்கூடியநூற்றுக்கணக்கானபக்தர்களுடன் நடைபெற்ற ஹரே கிருஷ்ண மஹாமந்திர கீர்த்தனை கோவை வாசிகளை மெய்சிலிர்க்க வைத்தது.

வீதியெங்கும் பிரசாத விநியோகம் நடைபெற, ரதயாத்திரையின் முடிவில் விக்ரஹங்கள், தீபங்களையும் மலர்களையும் கொண்டு வரவேற்கப்பட்டு, பத்மாவதி கலாச்சார நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பஜனை, சொற்பொழிவு, தரிசனம் என நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. மறுநாள் நடந்த நிகழ்ச்சிகளிலும் மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கைதவ தர்மம், ஹரி நாமத்தின் மகிமைகள், பிரபுபாதரின் பார்வையும் குறிக்கோளும் ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற உரையாடல்கள் நிகழ்ச்சிக்கு மெருகூட்டின.



**மேலே:** மெய்மறந்து பாடும் பக்தர்கள்

**இடது மேலே:** ரதயாத்திரையில் கலந்து கொண்ட கூட்டத்தின் ஒரு பகுதி

ஹவாய், அமெரிக்கா--மார்ச் 27, 1969

# ஸ்ரீ இராம நவமி

## பகவான் ஸ்ரீ இராமசந்திரரின் அவதாரத் திருநாள்

**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

ராமாதி மூர்திஷு கலா-நியமேன திஷ்டன்
நானாவதாரம் அகரோத் புவனேஷு கிந்து
க்ருஷ்ண: ஸ்வயம் ஸமபவத் பரம: புமான் யோ
கோவிந்தம் ஆதி-புருஷம் தம் அஹம் பஜாமி
(பிரம்ம சம்ஹிதை 5.39.)



### எண்ணிலடங்காத அவதாரங்கள்

பிரம்ம சம்ஹிதையின் இந்த ஸ்லோகத்தில் பகவான் இராமசந்திரரின் அவதாரம் பற்றி கூறப்பட்டுள்ளது. இராமாதி, இராமர் மட்டுமல்ல இன்னும் பற்பல அவதாரங்கள் உள்ளன. அவை ஆற்றின் அலைகளுக்கு ஒப்பிடப்படுகின்றன; ஒரு சமுத்திரத்தின் அல்லது ஆற்றின் அலைகளை எவ்வாறு கணக்கிட முடியாதோ, அதுபோலவே பரமபுருஷரின் அவதாரங்களையும் கணக்கிடமுடியாது. ஆனால் அவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி மட்டும் சாஸ்திரங் களில் குறிப்பு உள்ளது. எனவே தான், இங்கு இராமாதி என்று கூறப்பட்டுள்ளது. இராமாதி என்றால் இராமரும் இதர அவதாரங்களும் என்று பொருள்; ஓர் அவதாரம் தோன்றி மறைந்த பின்னர், அழிந்துவிடுவதில்லை. அவர் என்றும் நிலைத்திருப்பார்.

### ஸ்ரீ இராமரின் தோற்றம்

ஸ்ரீ இராமர் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு திரேதா யுகத்தில் இப்பூவுலகில் தோன்றினார். நாம் தற்போது கலி யுகத்தில் ஐந்தாயிரம் வருடங்களை கடந்து வாழ்ந்து கொண்டுள்ளோம். இதற்கு முந்தைய துவாபர யுகம், எட்டு இலட்சம் வருடங்களையும், துவாபர யுகத்திற்கு முந்தைய திரேதா யுகம், 12 இலட்சம் வருடங்களையும் கொண்டதாகும். இதன்படி, சுமார் இருபது இலட்சம் வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ இராமர் இப்பூவுலகில், அயோத்தியில் தோன்றினார். புதுதில்லியில் இருந்து வட கிழக்கில் ஐந்நூறு மைல் தொலைவில் அயோத்தி மாநகரம் உள்ளது. இராமபிரான் நவமி திதியில் தோன்றியதால் அத்தினத்தை இராம நவமி என்கிறோம். இராமரின் தந்தை அயோத்தியின் பேரரசரான தசரதர். அவருக்கு மூன்று மனைவியரும் நான்கு புதல்வர்களும் இருந்தனர். மூத்த மகன் ஸ்ரீ இராமர். அவரது வாழ்க்கை வரலாறு, இராமாயணம் என்னும் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

### கைகேயி கேட்ட வரம்

அரசுப் பணியிலிருந்து ஓய்வெடுக்க விரும்பிய தசரதர், தனது மூத்த மகன் இராமரை அரியணையில் அமர்த்த முடிவு செய்தார். ஆனால் பட்டாபிஷேகத்திற்கு ஒரு நாள் முன்பு தசரதரின் இளைய மனைவியான கைகேயி அனைத்தையும் தலைகீழாக மாற்றிவிட்டாள். ஒரு சமயம் மன்னன் தசரதர் தனது மனைவியின் தொண்டில் மகிழ்ச்சியுற்று, “ஏதேனும் வரம் வேண்டுமானால் கேள்,” என வாக்களித்திருந்தார், பதிலுக்கு கைகேயி, “தக்க சமயத்தில் பெற்றுக் கொள்கிறேன்,” என கூறியிருந்தாள்.

ஸ்ரீ இராமரின் பட்டாபிஷேகத்திற்கு

ஒருநாள்முன்புமன்னர்தனக்களித்திருந்த வரத்தைப் பற்றி கைகேயி மன்னருக்கு நினைவுபடுத்தினாள். மன்னர் தசரதரும், ‘‘இப்போது வரத்தை பெற்றுக் கொள்ள விரும்புகிறாயா, என்ன வரம் வேண்டும்?’’ எனக் கேட்டார். அவள் பதிலுக்கு, தனது மகன் பரதனுக்கு பட்டாபிஷேகம் நடக்க வேண்டும்; இராமருக்கு அல்ல என்றாள். திகைப்பில் மூழ்கிய மன்னர் அதற்கு சம்மதிக்க நேர்ந்தது. அக்காலத்தில், அக்காலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் சத்திரியர்களுக்கு பல மனைவியர் இருப்பர், அவர்களுக்குள் போட்டி ஏற்படும். மனிதரின் மனோநிலை ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. இருபது இலட்சம் வருடங்களுக்கு முன்பும் இதே மனோநிலை இருந்திருக்கிறது. தன் மகன் பரதன் அரசனாக வேண்டும் என்றும், இராமன் அல்ல என்றும் வேண்டினாள் அந்த இளைய மனைவி. அதுமட்டுமின்றி, மிகவும் சாமர்த்தியமாக, இராமர் பதினான்கு வருடங்கள் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்று மற்றுமொரு வரத்தையும் கேட்டாள். தசரதரும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று, அதுவே சத்திரிய தர்மம், சத்திரியர்கள் வாக்குத் தவறுவதில்லை. சத்திரியன் சவால்களை ஏற்க வேண்டும், பின்வாங்கக் கூடாது, போருக்கு அழைத்தால் போர் புரிய வேண்டும், பிறகு பார்க்கலாம் என்று சத்திரியன் கூறக் கூடாது.



## இராமரின் துறவு


மஹாராஜா தசரதர், தன் இளைய மனைவிக்கு அளித்த வாக்கின்படி மூத்த மகன் இராமனிடம் கூறினார், ‘‘எனதருமை மகனே, பதினான்கு வருடங்கள் நீ காட்டிற்குச் செல்ல வேண்டும். அதுவே உன் சிற்றன்னையின் விருப்பம், நீ அவ்வாறு செய்வாய் என நானும் வாக்களித்துவிட்டேன்.’’ இராமசந்திரரும், ‘‘அப்படியே செய்கிறேன், நான் தயார்’’ என்றார். அதுவே அவரது சிறப்பு. பகவானின் ஆறு ஐஸ்வரியங்களில் இதுவும் ஒன்று.


ஐஸ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய
வீர்யஸ்ய யஷஸ: ஷ்ரிய:
க்ஞான-வைராக்யயோஷ் சைவ
ஸன்னாம் பக இதீங்கனா
(விஷ்ணு புராணம் 6.5.47)

செல்வம், வீரம், அழகு, புகழ், அறிவு மற்றும் துறவு இவற்றை பூரணமாக உடையவரே பகவான். துறவின் பூரணத்துவத்தை இராமசந்திரர் இங்கு வெளிப்படுத்துகிறார். மேற்கூறிய எந்த குணத்திலும் யாரும் பகவானை மிஞ்ச முடியாது, பகவான் இராமசந்திரர் முழு இராஜ்ஜியத்தையும் துறந்து, தன் தந்தைக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டார். மறுநாள் அவர் சிம்மாசனம் ஏறப்போகிறார் என்பதால், முழு நகரமும் அலங்கரிக்கப்பட்டு, அனைவரும் அதனைக் கொண்டாடிக் கொண்டு இருந்தனர். ‘‘தந்தையே, ஒரு பெண்ணின் தூண்டுதலால் இவ்வாறு தாங்கள் நடந்து கொள்வது தவறு, இதனை நிறுத்துங்கள். அனைவரும் நாளை எனது பட்டாபிஷேகத்திற்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள்,’’ என அவர் தனது தந்தையிடம் விவாதித்திருக்கலாம். ஆனால் இராமர் அவ்வாறு விவாதம் செய்யவில்லை. உடனே ஒத்துக் கொண்டார். ‘‘சரி தந்தையே, அப்படியே ஆகட்டும்.’’

## சீதை உடன்வருதல்

இராமரின் தம்பிகளில் ஒருவர் லக்ஷ்மணர், அவர் இராமரை வேண்டினார்: ‘‘தயவுசெய்து என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.’’ ‘‘அஃது உன் விருப்பம், நீ விரும்பினால் என்னுடன் வரலாம்,’’ என்று இராமர் பதிலளித்தார். பிறகு இராமரின் மனைவியான சீதை தானும் வருவதாகக் கூறினார். இராமரோ, ‘‘என்னுடன் நீ வர இயலாது. அது மிகவும் கடினம், நீ ராஜபுத்ரி, வனத்தில் வாழும் கடினமான வாழ்க்கை முறையை உன்னால் ஏற்க முடியாது’’ என்று கூறினார். அதற்கு சீதை, ‘‘நான் தங்களின் மனைவி, நீங்கள் நரகத்திற்குச் சென்றாலும் உங்களுடன் நான் வர வேண்டும்,’’ என்று பதிலுரைத்தார். இதுவே சிறந்த மனைவியின் அடையாளம், ‘‘உங்கள் தந்தை உங்களை காட்டிற்குப் போகச் சொன்னார். நீங்கள் போய் வாருங்கள், நான் என் தந்தை வீட்டிற்குச் செல்கிறேன், அல்லது இங்கேயே இருக்கிறேன்,’’ என்று சீதை கூறியிருக்கலாம். இல்லை! கணவனின் எப்படிப்பட்ட சூழ்நிலையையும் மனைவி ஏற்கத் தயாராக இருக்க வேண்டும், இதுவே சிறந்த மனைவியின்







அடையாளம். கணவன் பணக்காரனாக இருக்கும் போது மனைவி அவனுக்கு நம்பிக்கையுடன் நடந்து கொள்வதும், பின்னர் ஏழையானதும் அல்லது காட்டிற்கு செல்லும் போதும் அவனை விட்டுவிடுவதும் தவறு. மனைவி என்றால் சரிபாதி, அவள் கணவனின் நிழல். நிழல் நிஜத்தை தொடர்வதைப் போல கணவன் செல்லும் இடத்திற்கு மனைவியும் செல்ல வேண்டும். ஆனால் தற்போது அதை தவறாக புரிந்து கொண்டு மனைவியை சிலர் அடிமையாக்கி விடுகின்றனர். ஆனால் அது தவறாகும்.

## தசரதர் மறைவு

இராமரின் தம்பியான பரதன் நாடாள வேண்டும் என அவனது தாய் கைகேயி விரும்பினார். ஆனால் பரதனோ இராமர் இருக்கும் வரை அவரே மன்னர் என்பதில் உறுதியுடன் இருந்தார். இருப்பினும், தன் பிரிய மகன் இராமனின் பிரிவைத் தாளாமல் மன்னர் தசரதர் உயிரை நீத்துவிட்ட காரணத்தால், நாட்டை நிர்வகிக்குமாறு பரதனிடம் வேண்டியிருந்தார் இராமர்.



## இராவணனுடன் யுத்தம்

பிறகு, இராமர் தன் மனைவி மற்றும் தம்பியுடன் காட்டிற்குச் சென்றார். இளமையாகவும் அழகாகவும் திகழ்ந்த சீதைக்கு அடர்ந்த காட்டில் பாதிப்புகள் வரலாம், அரக்கர்கள் வரலாம் என இராமர் எண்ணினார். உண்மையில் அவ்வாறே பின்பு நடந்துவிட்டது. சீதையை இராவணன் கடத்திச் சென்று விட்டான்.



இராவணனின் முழு குடும்பத்தையும் ஸ்ரீ இராமர் சீதைக்காக அழித்தார். மனைவி எப்படியோ அவ்வாறே கணவனும். மனைவி நம்பிக்கையுடன் தன் கணவனை காட்டிலும் பின்தொடர்ந்தாள். கணவனும் நம்பிக்கையுடன் தன் மனைவி கடத்தப்பட்டாள் என்பதால், இராவணனின் முழுகுடும்பத்தையும் அழித்தார்.


இராவணனுடன் போர் புரிவதற்காக, இராமர் தன் நாட்டிற்குச் சென்று படைகளைத் திரட்டிக் கொண்டு வரவில்லை. காட்டில் இருக்குமாறு கட்டளையிடப்பட்டு இருந்ததால், அவர் நாடு திரும்பவில்லை. அங்கேயே வானரங்களைக் கொண்டு ஒரு படையை உருவாக்கி, இராவணனிடம் போர் புரிந்தார். இந்தியாவின் முனையிலிருந்து மறுபக்கத்திலிருந்த இலங்கை வரை பாலம் கட்டினார்.

## மன்னர்களில் சிறந்தவர்

இராமபிரான் தோன்றிய இந்த நன்னாளில் அவரது வாழ்க்கைச் சம்பவங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அவரைப் போல பல மன்னர்கள் இருந்தனர். மஹாராஜா யுதிஷ்டிரர் இராமபிரானைப் போன்றே சிறப்பு மிக்கவர், மாமன்னர் பரிக்ஷித்தும் அத்தகையவரே. பல நல்ல மன்னர்கள் இருந்தனர். ஆனால் மன்னருக்கெல்லாம் மன்னர் ஸ்ரீ இராமர். அவரது பிறந்த நாளில் நாம் விரதம் அனுஷ்டிக்கிறோம். முழுமுதற் கடவுளின் மூல ரூபம் கிருஷ்ணர், அவர் தன்னை இராமர் உட்பட பல்வேறு ரூபங்களில் விரிவுபடுத்துகிறார். *அத்வைதம் அச்யுதம் அனாதிம் அனந்த ரூபம்* (பிரம்ம சம்ஹிதை 5.33.) எனவேதான், பகவானின் அவதாரங்களை கணக்கிடவே முடியாது என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. ஆனால் மிக முக்கிய அவதாரங்களின் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இராமபிரானின் அவதாரமும் அவற்றுள் ஒன்று. இராவணனின் வதத்திற்கு பிறகு அவனது தம்பியை இலங்கையின் அரியணையில் ஏற்றினார் இராமர். இலங்கையை கைப்பற்றுவதற்காக இராமர் அங்குச் செல்லவில்லை. இராவணனை தண்டிப்பதற்காகவே அங்குச் சென்றார். தனது பக்தனான விபீஷணனை அரசனாக்கிவிட்டு தன் மனைவி சீதையுடன் அவர் நாடு திரும்பினார். பதினான்கு வருடங்களுக்கு பிறகு நாடு திரும்பிய இராமர், அயோத்தியின் அரசராக நியமிக்கப்பட்டார்.

## இராம இராஜ்ஜியம்

ஸ்ரீ இராமரின் சரிதம் ஒரு சிறந்த வரலாறு. இராமபிரான் ஒரு சிறந்த முன்னுதாரணம், மன்னன் எப்படி இருக்க வேண்டும் என்று மக்களுக்கு போதிப்பதற்காகவே அவர் தோன்றினார். அதனால் நல்ல அரசாங்கத்திற்கு, இராமரின் அரசாங்கம் உதாரணமாக கொடுக்கப்படுகிறது. இராம இராஜ்ஜியம், இராமபிரானின் ஆட்சியில் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.



அப்பொதெல்லாம் நீதிமன்றம் என்று தனியாக ஏதும் கிடையாது. மன்னர் ராஜசபையில் அனைவரின் முன்னிலையில் அமர்ந்திருப்பார், யாருக்காவது ஏதாவது பிரச்சனை என்றால், அவர்கள் மன்னரை நேரடியாக அணுகலாம். நடைமுறையில், யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை. அனைவரும் சந்தோஷமாக இருந்தனர். சிறு பிரச்சனைகள் எப்போதாவது வரலாம். இயற்கைக்கு முரண்பட்ட விஷயங்கள் ஏதும் பொதுவாக நடக்காது, அதிகமான வெப்பமோ குளிரோ வந்தால் அதற்கு அரசரே பொறுப்பாளியாவார். ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து இதை நீங்கள் அறிந்து கொள்ளலாம், மன்னருக்கு பொறுப்புகள் அதிகம், பிரஜைகளின் மகிழ்ச்சியைப் பற்றியே எப்போதும் மன்னர்கள் நினைத்துக் கொண்டிருப்பர். பிரஜைகளும் மிகவும் நல்லவர்களாக இருந்தனர்.

## இராம லீலைகளைக் கேட்பதன் பலன்

இராமபிரானின் லீலைகளை கேட்பதன் மூலம் அவருடன் நாம் தொடர்பு கொள்கிறோம். இராமருக்கும், அவரது நாமம், ரூபம், மற்றும் லீலைகளுக்கும் எந்த பேதமும் இல்லை; ஏனெனில், அவர் பூரணமானவர், நீங்கள் இராம நாமத்தை ஜெபிக்கலாம், அவரது விக்ரஹத்தை தரிசிக்கலாம், அல்லது அவரது லீலைகளைப் பற்றி பேசலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் பகவானுடன் தொடர்பு கொள்கிறோம். பகவானின் அவதாரங்கள் தோன்றிய தினங்களில், அவரைப் பற்றிக் கேட்பதன் மூலம் அவருடன் தொடர்பு கொள்கிறோம், அதனால் நாம் தூய்மைபடுத்தப்படுகிறோம். நமது வழிமுறை தூய்மைப்படுத்துவதாகும். பிறப்பினால் அனைவருமே சூத்திரர்கள். சூத்திரர் என்றால் எப்போதும் வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பவர்கள், சிறிதளவு இழப்போ துன்பமோ வந்தாலும் அவர்கள் வருத்தப்படுவர். கலௌ ஸூத்ர ஸம்பவ, கலி யுகத்தில் அனைத்து மக்களும் சூத்திரர்களே, பிறப்பால் அனைவரும் சூத்திரர்களே. புனிதப்படுத்தும் சடங்குகளோ பயிற்சிகளோ தற்போது இல்லை. எப்படி பணம் சம்பாதிப்பது, புலனுகர்ச்சியை அடைவது என்பதற்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால் சிறந்த வேத கலாசாரத்தில் நாம் நமது மனித வாழ்க்கையை வெற்றிகரமாக்கலாம். கிருஷ்ண உணர்வை பரப்புவதன் மூலமும், அனுஷ்டிப்பதன் மூலமும் அந்த இனிய கலாசாரத்தை மீண்டும் புதுப்பிக்கலாம். அனைத்து மக்களும் இதனை ஏற்றுக்கொள்ளாவிடினும், இவ்வழியை ஏற்றுக் கொள்பவர்கள், சமுதாயத்தில் சிறந்த முன்னுதாரணமாக இருப்பர், அதன் மூலம் அனைவரும் பயன் பெறலாம்.





இலண்டனில் உள்ள இஸ்கானுக்குச் சொந்தமான பக்திவேதாந்த மேனர் எனப்படும் பிரம்மாண்டமான கோவிலில் அருள்பாலிக்கும் ஸ்ரீ ஸ்ரீ சீதா, ராம, லக்ஷ்மண, அனுமானின் விக்ரஹங்கள்.



# கீதை காட்டும் பாதை, திருச்சிராப்பள்ளி

புத்தாண்டை புதுமையாகத் தொடங்குவதற்கும் ஆன்மீக ஆனந்தத்தில் ஆடி மகிழவும் திருச்சி மக்களுக்கு இஸ்கான் சார்பில் ஜனவரி முதல் நாளன்று அழைப்பு விடப்பட்டது. "கீதை காட்டும் பாதை" எனும் தலைப்பில் நடைபெற்ற அச்சிறப்பு நிகழ்ச்சி திருச்சி மக்களை பெருமகிழ்ச்சியில் திளைக்கச் செய்தது.

நிகழ்ச்சியில் பங்குகொள்ள மக்களுக்கு அழைப்பு விடுப்பதற்காக, சுமார் பதினைந்து பக்தர்கள் அடங்கிய குழு, நிகழ்ச்சிக்கு ஒரு வாரத்திற்கு முன்பிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளில் ஹரி நாம சங்கீர்த்தனம் செய்து மக்களைக் கவர்ந்தனர். ஏராளமான வண்ணத் துண்டுப் பிரசுரங்களும் பேனர்களும் திருச்சி மாநகர் முழுவதும் இந்நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தின. பல்வேறு பத்திரிகைகளில் நிகழ்ச்சி குறித்த தகவல்கள் பிரசுரமாயின.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு, சுமார் 800 பக்தர்கள் அடங்கிய குழுவினர், திருச்சி தில்லைநகரின் மக்கள் மன்றத்திலிருந்து ஹரி நாம சங்கீர்த்தனம் செய்தபடி நிகழ்ச்சி நடைபெறவிருந்த E.R. மேல்நிலைப்பள்ளி மைதானத்திற்கு வந்தனர். சங்கீர்த்தனக் குழுவின் முன்பகுதியில் ஸ்ரீல பிரபுபாதர் (தனது மூர்த்தி வடிவில்) ஓர் அழகிய வாகனத்தில் அமர்த்தப்பட்டிருந்தது காண்போரின் கண்களைக் கவர்ந்தது.

சுமார் 3000க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள, பக்தர்களால் நிகழ்த்தப்பட்ட "யார் முட்டாள்?" என்னும் ஆன்மீக விழிப்புணர்வு நாடகம், வந்தோர் அனைவரையும் சிந்திக்கத் தூண்டியது. அதனைத் தொடர்ந்து E.R. மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் திரு. சீனிவாசன் பக்தர்களையும் மக்களையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தினமலர் நாளிதழின் திரு.கோபால்ஜி, நமது மதம், பண்பாடு ஆகியவற்றைப் பின்பற்றுவதிலும் பகவத் கீதையைப் படிப்பதிலும் மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து, ஐரோப்பாவின் ஸ்லோவீனியா நாட்டைச் சார்ந்த அருட்திரு. வாசுதேவ தத்த தாஸ், பகவத் கீதையின் முக்கியத்துவம் குறித்து தமிழ் மொழியில் பேச, கூட்டத்தினர் அடிக்கடி கரவொலி எழுப்பி தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

"கீதை காட்டும் பாதை" என்னும் தலைப்பில் இறுதியாக பேசிய ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரும் இஸ்கான் சந்நியாசிகளில் ஒருவருமான தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி (இலண்டன்), கிருஷ்ணரிடம் சரணடைவதே கீதையில் காட்டப்படும் பாதை என்றும் பக்தித் தொண்டைப் பின்பற்றுவதே அவ்வாறு சரணடைவதற்கான வழிமுறை என்றும் விளக்கினார். இஸ்கான் ஸ்ரீரங்கம் கிளையின் மேலாளரான திரு. ரதீஷ் தாஸ், "பல்வேறு நாட்டு பக்தர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, பங்கேற்றவர்களின் மனதில் நீங்கா இடம் பெற்றிருப்பது உறுதி," என்று கூறினார்.




**மேலே:** ஸ்லோவீனியாவின் வாசுதேவ தத்த தாஸ், தமிழில் பேசி பகவத் கீதையை வலியுறுத்திய காட்சி; அருகில், தினமலர் திரு. கோபால்ஜி, தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி, திரு. சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.




**இடது:** "யார் முட்டாள்?" நாடகத்தின் ஒரு காட்சி




# யாருக்குச் சொந்தம்?

**ஓர் ஆழ்ந்த ஆய்வு**

*தான் பிறந்த இடத்தை தனக்கே சொந்தமாகக் கருதி, மற்றவர்களுக்கு அங்கு இடம் வழங்க மறுப்பதால் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சனைகள் அனைவரும் அறிந்த ஒன்று. இதனை சற்று அலசிப் பார்ப்போம்.*

வழங்கியவர்: திரு. ஸ்ரீ கிரிதாரி தாஸ்

## அடிப்படை காரணம்

அரசியல் காரணங்களை ஒதுக்கி விட்டுப் பார்த்தோமெனில், ஓர் இடத்தில் பிறந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்த பல்வேறு நபர்கள், அந்த நகரத்தில் உள்ள வேலைவாய்ப்புகளையும் வசதிகளையும் பறித்துக் கொள்ள, அங்கேயே பிறந்து வளர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் வசதிகளும் குறைந்துவிட்டன என்பதே இப்பிரச்சனையின் அடிப்படைக் காரணமாகத் தோன்றுகின்றது. பல்வேறு மக்கள் இடம் பெயர்ந்ததற்கு என்ன காரணம்?

## நகரமயமாக்கம், தொழில்மயமாக்கம்

விவசாயத்தையும் பசு பராமரிப்பையும் அடிப்படையாகக் கொண்ட பாரதம் செல்வச் செழிப்புடன் திகழ்ந்து வந்தது. பாரதத்தை நோக்கி படையெடுத்த பல்வேறு பிரிவினரே இதற்கு சாட்சி. ஆனால் பாரதம் பெயரளவிலான சுதந்திர நாடாக மலர்ந்த பின்னர், ஏதோ சில காரணங்களால், விவசாயம் செய்வது கௌரவமான தொழில் அல்ல என்றும், நகரத்திற்குச் சென்று வேலை பார்ப்பதே கௌரவமானது என்றும் மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டனர். அந்த எண்ணம் இன்றுவரை உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. நகரத்தில் பல்வேறு வேலைவாய்ப்புகள் இருப்பதாகவும், சொகுசான வாழ்க்கை கிடைப்பதாகவும் விளம்பரப்படுத்தப்பட, கிராமத்தவர் அனைவரும் நகரத்தை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். இந்தியாவெங்கும் உள்ள கிராமங்கள், குடிமக்களின்றி வெற்றிடமாகி வருகின்றன; விவசாய நிலங்கள் வறட்டு நிலங்களாக மாறி வருகின்றன. நகரப் பகுதிகளில் இருக்கும் விவசாய நிலங்கள், பிளாட் போடப்பட்டு பலமாடிக் கட்டிடங்களாக ஆகி வருகின்றன. இவ்வாறு அனைவரும் நகரத்தை நோக்கி இடம்பெயர்ந்தால், மும்பை பிரச்சனையைப் போன்ற பிரச்சனைகள் வராமல் இருக்குமா என்ன? நிச்சயம் வரும். அனைவரையும் நகரத்தை நோக்கி அனுப்பிய பின்னர், அதனால் எழும் பிரச்சனைகளைப் பற்றி யோசிப்பது என்பது, தும்பை விட்டு வாலைப் பிடிப்பதைப் போன்றது.

## நகர வாழ்க்கையும் கிராம வாழ்க்கையும்

நகரத்தில் சொகுசான வாழ்க்கை வாழலாம் என்று நினைப்பவர்கள், நகரத்தில் வாழ்பவர்களையும் கிராமத்தில் வாழ்பவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். விடியற் காலையில் எழுந்து பல்கூட துலக்காமல், இரயிலையோ பேருந்தையோ பிடித்து, அங்கேயே பல் துலக்கி, இரண்டு மணி நேரம் பயணம் செய்து, பின்னர் அலுவலகத்தில் குறைந்தது 10 மணி நேரம் வேலை செய்து, நள்ளிரவில் வீடு திரும்பும் நகரத்தவர்கள் எண்ணற்றோர். குறைந்த பட்சம், நகரத்தில் வேலை பார்க்கும் ஒவ்வொருவரும், மன அழுத்தம், எந்த நேரமும் பறிபோகக்கூடிய வேலை, உயர் அதிகாரிகளின் வஞ்சகத் தன்மை போன்றவற்றால் விழி பிதுங்கி கதியற்று நிற்கின்றனர். கம்ப்யூட்டர் துறையில் பெரும் வளர்ச்சி பெற்று



விளங்கும் பெங்களூரில், மனநிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் பெரும்பாலானோர், கம்ப்யூட்டர் துறையில் பணிபுரிபவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டும். மும்பை, புதுடில்லி, கல்கத்தா, சென்னை போன்ற மாநகரங்கள் மட்டுமின்றி, இதர நகரங்களும் மக்களின் படையெடுப்பிற்கு உட்பட்டு இதே போன்ற நிலைமையை சந்தித்து வருகின்றன. அதிக வருமானம் பெற்றால் மகிழ்ச்சியாக வாழலாம் என்ற எண்ணத்துடன் நகரத்திற்கு வருவோர், வேலையின்றி திண்டாடுகின்றனர்; வேலை கிடைத்து கைநிறைய சம்பளம் கிடைத்தாலும், அந்த பணத்தைக் கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைத்தனரோ அவற்றை செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். பகட்டான வாழ்க்கையை எதிர்பார்த்தவர்களுக்கு, ஆரோக்கியமான உணவு கிடைப்பதில் லை, சுத்தமான காற்று கிடைப்பதில்லை, குடிக்கத் தூய்மையான தண்ணீர்கூட கிடைப்பதில்லை, சாப்பிட நேரமில்லை, குடும்பத்தினருடன் செலவழிக்க நேரமில்லை, குழந்தைகளுடன் விளையாட நேரமில்லை, உறங்க நேரமில்லை, கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதைப் பற்றி நினைக்கக்கூட நேரமில்லை. அதே சமயத்தில், மேலோட்டமாகக் குறைந்த வருமானம் பெறும் கிராமத்தவர்கள், அதிகபட்சம் ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் மட்டுமே விவசாயத்தில் ஈடுபட்டு, எளிமையான முறையில் அமைதியாக, ஆரோக்கியமாக, இன்பமாக வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறைந்த வருமானமும் நிறைந்த மகிழ்ச்சியைத் தரும் என்பதை கிராமத்தவரும் நகரத்தவரும் உணர வேண்டியது அவசியம். சொகுசான வசதிகள் இல்லாததால் கிராமத்தவர்கள் அடையும் துயரங்கள், பல்வேறு வசதிகள் இருப்பதால் நகரத்தவர்கள் அடையும் துயரங்களைக் காட்டிலும் குறைவானதே.



## நிறுத்துங்கள், நகரமயமாக்கத்தை!

நகரமயமாக்கம் நிறுத்தப்பட வேண்டும், இல்லையெனில் மும்பை பிரச்சனையை போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வே கிடைக்காது. விவசாயம் செய்வோர் ஊக்குவிக்கப்பட வேண்டும், இல்லையேல் அவர்கள் நகரத்திற்கு இடம்பெயர்வது தவிர்க்கப்பட முடியாதது. நீர், இயற்கை உரம், மானியம், போன்ற விவசாயத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்வதில் அரசாங்கம் ஆர்வம் காட்டுவதில்லை, கொள்ளையடிப்பதற்கான வசதிகள் நகரங்களில் அதிகமாக இருப்பதே அதற்கு காரணம் என்பதை அனைவரும் அறிவர். கிராமங்கள் அழிவுற்று நகரங்கள் மட்டும் எஞ்சியிருந்தால், நகரத்தின் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும்






**மேலே:** *மும்பை இரயில் நிலையத்தின் இரயில்களிலும் நடைபாதையிலும் காணப்படும் தினசரி காட்சி;*
**அதற்கும் மேலே:** *விழி பிதுங்கி பணிபுரியும் அலுவலர்;* **வலது:** *டென்ஷனில் கம்ப்யூட்டரை கடிக்கும் இளைஞர்.*

போல்டு, நட்டுகளை நம்மால் சாப்பிட முடியுமா என்ன! அல்லது கம்ப்யூட்டரை கடித்து சாப்பிடத்தான் முடியுமோ!

## உடல் சார்ந்த அடையாளம்

ஒவ்வொருவரும் தன்னை தனது உடலுடன் அடையாளப்படுத்திக் கொள் கின்றனர். இந்தியாவில் பிறந்ததால் இந்தியன் என்றும், அமெரிக்காவில் பிறந்ததால் அமெரிக்கன் என்றும், இங்கிலாந்தில் பிறந்ததால் ஆங்கிலேயன் என்றும், ஆஸ்திரேலியாவில் பிறந்ததால் ஆஸ்திரேலியன்என்றும்ஒவ்வொருவரும் தன்னை அடையாளப்படுத்திக் கொள் கின்றனர். இந்த அடையாளங்கள் அனைத்தும் பொய்யானவை; நாம் அனைவரும் ஆன்மீக ஆத்மா, முழுமுதற் கடவுளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தொண்டு செய்ய வேண்டியவர்கள். அதனை மறந்த காரணத்தினால் உடல் சார்ந்த அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு, நாட்டினர், இனத்தவர் என்று தொண்டு செய்து கொண்டுள்ளோம். நாம் இந்த உடலல்ல, ஆன்மீக ஆத்மா என்பதே பகவத் கீதையின் அடிப்படைப் பாடம், இந்தப் பாடம் உலகத்தவர் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கப்பட்டால், பிறந்த மண்ணையும் பெற்றுள்ள உடலையும் அடிப்படையாகக் கொண்டு போராட்டத்தில் ஈடுபடுவோர் அனைவரும் திருப்தியை அடைய முடியும். பகவத் கீதையின் இந்த அறிவு மக்களுக்கு வழங்கப்பட்டால் எந்தவித சமுதாயப் பிரச்சனைகளுக்கும் இடமில்லை. ஆஸ்திரேலியாவில் நடைபெறும் இனவெறித் தாக்குதல், உலகின்பல்வேறுபகுதிகளில்நடைபெறும் மதக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் என அனைத்திற்கும் நிரந்தரத் தீர்வு இது மட்டுமே.





## யாருக்குச் சொந்தம்?

*ஈஷாவாஸ்யம் இதம் ஸர்வம்* என்று ஈஷோபநிஷத் (மந்திரம் 1) கூறுவதன்படி, குறிப்பிட்ட நகரம் மட்டுமல்ல, மாநிலம் மட்டுமல்ல, மொத்த இந்தியா மட்டுமல்ல, மொத்த உலகமும், அதிலுள்ள உலகத்தார் அனைவரும், மனிதர்கள் மட்டுமின்றி அனைத்து உயிரினங்களும் முழுமுதற் கடவுளுக்குச் சொந்தமானவை. அவரவர் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பங்கை பயன்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் பிரச்சனைகளுக்கு இடமில்லை. இதே கருத்து பகவத் கீதையிலும் (5.29) உறுதி செய்யப்பட்டுள்ளது: *ஸர்வ லோக மஹேஸ்வரம்*, "அனைத்து உலகமும் முழுமுதற் கடவுளுக்கே சொந்தமானது."

முழுமுதற் கடவுளே மொத்த உலகத்திற்கும் சொந்தமானவர் என்பதை உணராதபட்சத்தில், நாடு, மொழி, மதம், மாநிலம், இனம் என பல்வேறு விதத்தில் ஒருவன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அதற்காகப் போராடுகின்றான். அத்தகு மக்களின் மனப்பான்மையை ஸ்ரீல பிரபுபாதர் பின்வருமாறு சாடுகிறார்: "தன்னை பாதுகாவலனாகக் கருதும் நாய் ஒன்று, யாராவது அதன் பகுதியில் சென்றால், 'லொள், லொள்' என்று குரைக் கின்றது. அதுபோல, நாயின் மனப் பான்மையுடன் செயல்படுவோர், 'நீங்கள் ஏன் எனது நாட்டிற்கு வந்தீர்கள்? ஏன் எனது எல்லைக்குள் வந்தீர்கள்?' என்று குரைக்கின்றனர்." (பில் ஃபைல் என்ற பத்திரிக்கை நிருபருடன் அக்டோபர் 8, 1975ல், டர்பனில் நடந்த சந்திப்பு) தேசிய ஒருமைப்பாடு மட்டுமின்றி சர்வதேச ஒருமைப்பாட்டிற்கும் இந்த அறிவு மிகவும் உதவியாக அமையும்.

**ஸ்ரீ கிரிதாரி தாஸ்,** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தமிழ் பிரிவில் தொகுப்பாசிரியராக தொண்டாற்றி வருகிறார்.

# கோவில் கட்டுவது ஏன்?

## சேலத்தில் நடந்த பூமி பூஜையில் விளக்கம்

சேலம் மாநகரின் கருப்பூர் பகுதியில் அமைந்துள்ள இஸ்கானின் சார்பில் அங்கே பகவான் ஸ்ரீ சைதன்யருக்கும் ராதா கிருஷ்ணருக்கும் பிரம்மாண்டமான முறையில் ஒரு கோவில் கட்டுவதற்கான பணிகள் தொடங்கிவிட்டன. அதற்கான பூமி பூஜை திருவிழா, கடந்த ஜனவரி மாதம் 14ம் நாள், மங்களகரமான பொங்கல் நன்னாளில் நடந்தேறியது.

இஸ்கான் தலைமையகமான ஸ்ரீதாம் மாயாப்பூரில் செயல்படும் பக்திவேதாந்த அகாடமியின் இணை இயக்குனரான ஸ்ரீமான் பிரீதி வர்தன தாஸ் அவர்கள், ஹோமம், அபிஷேகம் உள்ளிட்ட சடங்குகளை அகாடமியைச் சார்ந்த இதர ஐந்து மாணவர்களுடன் இணைந்து நிறைவேற்றினார். பூமி பூஜையுடன் இணைந்து அனந்த சேஷரும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டார். காலை 6 மணி முதல் 9 மணி வரை இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரும் மூத்த சந்நியாசிகளில் ஒருவருமான தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி, கேரளா மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளின் காரியதரிசியான தவத்திரு பக்தி வினோத ஸ்வாமி, ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரும் பரோடாவிலுள்ள இஸ்கான் கோவிலின் தலைவருமான அருட்திரு பாஸுகோஷ் தாஸ், இஸ்கான் வேலூர் கிளையின் மேலாளரான அருட்திரு அகிஞ்சன கிருஷ்ண தாஸ் உட்பட நூற்றுக்கணக்கான பக்தர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

விரைவில் கட்டப்படவிருக்கும் ஸ்ரீ கௌர ஸ்ரீஸ்ரீ ராதா கோகுலானந்தரின் திருக்கோவில் முற்றிலும் இயற்கையான கட்டுமான பொருள்களைக் கொண்டு கட்டப்பட உள்ளது என்றும், இரும்புக் கம்பிகள், சிமெண்ட் போன்றவை இத்திருக்கோவிலின் கட்டிடத்தில் ஏறக் குறைய இடம்பெறாது என்றும், மண்ணை திடப்படுத்தி சுவர்களை எழுப்பும் (rammed earth) தொழில்நுட்பத்தின் மூலம் இவை கட்டப்படும் என்றும் சேலம் கிளையின் மேலாளரான அருட்திரு கோகுல சந்திர தாஸ் அவர்கள் தெரிவித்தார். மேலும், நூற்றுக்கணக்கான வருடங்கள் நிலைத்திருக்கும் இக்கட்டிடங்களை குறைந்த செலவில் அமைத்து விடலாம் என்பது மட்டுமின்றி, இவை இயற்கையுடன் ஒத்துழைக்கும் பசுமைக் கட்டிடங்களாகவும், தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு உதவியாகவும், மிகவும் பலமாகவும் அமையும் என்றும் கூறினார்.

கோவிலுடன் இணைந்து, மூவாயிரம் மக்கள் அமரக்கூடிய திறந்த வெளியரங்கம், ஆயிரம் மக்களுக்கான மாபெரும் பிரசாதக் கூடம், குறுகிய நேரத்தில் தூய்மையான முறையில் அதிக அளவு பிரசாதத்தினை தயாரிப்பதற்காக நவீன மடப்பள்ளி (சமையலறை), வேத விண்ணரங்கு, ஸ்ரீல பிரபுபாதரின் குடில், இளைஞர் பயிற்சிக் கூடம், விருந்தினர் மாளிகை, கோவிந்த உணவகம் ஆகியவையும் கட்டப்பட உள்ளன. இவற்றின் மதிப்பீடு சுமார் ஏழு கோடி ரூபாயாகும்.

பூமி பூஜையைத் தொடர்ந்து நடைபெற்ற நான்கு நாள் சத்சங்க நிகழ்ச்சியில் தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி அவர்கள் பூமி பூஜையின் அர்த்தம், கோவில் கட்டுவதன் குறிக் கோள், உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சிறப்புரையாற்றினார். அவற்றிலிருந்து சில துளிகள்:

கற்கள், நதிகள், மரங்கள், மலைகள், நிலம் என எண்ணிலடங்காத இயற்கைத் தன்மைகளை வணங்குவது இந்து மதத்தைச் சார்ந்தவர்களின் பண்பாடு. ஆனால் வைஷ்ணவர்கள், வேருக்கு நீர் ஊற்றுவதால் மரத்தின் இலைகள், கிளைகள் என அனைத்து பகுதிகளும் சக்தி பெறுவதை அடிப்படையாகக் கொண்டு, அனைத்திற்கும் மூல வேராக விளங்கும் பகவான்



ஸ்ரீ கிருஷ்ணரை மட்டுமே வழிபடுகின்றனர்.

இருப்பினும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் அல்லது அவர் சம்பந்தப்பட்ட விஷயங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் கற்கள், நதிகள், மரங்கள், மலைகள், நிலம் போன்றவற்றையும் வைஷ்ணவர்கள் சில குறிப்பிட்ட காலக் கட்டத்தில் வழிபடுகின்றனர். உதாரணமாக, கங்கையையும் துளசியையும் வழிபடுவது வைஷ்ணவ மரபில் ஊறியுள்ள விஷயங்கள். இருப்பினும், கங்கா தேவியும் துளசி தேவியும் கிருஷ்ணருடன் கொண்டுள்ள தொடர்பின் காரணத்தினால் மட்டுமே வழிபடப்படுகின்றனரேயொழிய தனிப்பட்ட முறையில் அல்ல. அதுபோலவே, விஷ்ணுவின் சக்திகளில் ஒருவரான பூமித் தாயும் வழிபாட்டிற்குரியவர்; குறிப்பாக, பூமியின் மீது அவரது பிரபுவான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருக்கோவிலை எழுப்புவதற்குமுன்புவழிபாட்டிற்குரியவர். இதுவே வைஷ்ணவர்கள் நடத்தும் பூமி பூஜையின் உட்பொருள்.

பல்வேறு காலக்கட்டத்தில் பல்வேறு நபர்களால் பல்வேறு பகுதிகளில் இறைவனை (அல்லது அவர்கள் யாரை இறைவனாகக் கருதுகின்றனரோ அவரை) வழிபடுவதற்காக பல்வேறு பிரம்மாண்டமான கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள், அல்லது இதர கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. அவை வழிபடுவதற்கான நோக்கத்துடன் கட்டப்பட்டாலும்கூட, அவற்றில் பெரும்பாலானவை இதர உள்நோக்கத்துடன் அமைக்கப்பட்டன.

இறைவனுடன் இணைந்து தனது பெயரும் நிலைத்திருக்க வேண்டும், தன்னால் வழிபடப்படும் இறைவனே மிகவுயர்ந்தவர் என்பதை நிலைநாட்ட வேண்டும், மற்றவரின் வழிபாட்டுத் தலம் இங்கு இருக்கக் கூடாது, பணம் சம்பாதிப்பதற்கான எளிய வழி, தங்களது கட்டிடக் கலையை மக்களுக்கு பறைசாற்ற மிகச்சிறந்த வழி, தனக்குப் பிரியமானவரை திருப்திப் படுத்துதல் என பல்வேறு உள்நோக்கங்கள் அவற்றில் அடங்கும். ஆனால் இங்குக் கட்டப்படவிருக்கும் கோவில், அத்தகு உள்நோக்கங்கள் ஏதுமின்றி, மக்களுக்கு பகவத் கீதையின் செய்தியை அதன் உண்மையுருவில் வழங்குவதற்காகவும், தூய பக்தியை பயிற்சி செய்வதற்கு ஓர் உகந்த இடம் அமைப்பதற்காகவும் மட்டுமே கட்டப்படுகின்றது.

இங்கு கலப்படமான பக்திக்கு இடமில்லை. வயிற்றுப் பிழைப்பிற்காகவும் சொகுசான வாழ்விற்காகவும் மடத்தில் வாழ நினைப்பவர்களுக்கு இங்கு இடமில்லை. இங்குள்ளவர்கள் அனைவரும் எவ்வித பௌதிக ஆசையும் இன்றி கிருஷ்ணருக்குத் தொண்டு செய்ய வேண்டும், பகவத் கீதையை சற்றும் விட்டுக்கொடுக்காமல் உள்ளது உள்ளபடி பிரச்சாரம் செய்ய வேண்டும். அத்தகு தூய பக்திக்குக் களங்கம் ஏற்பட்டு, வரலாற்றில் என்றாவது ஒருநாள் இங்குள்ள பக்தர்கள் உள்நோக்கத்துடன் செயல்பட்டார்கள் என்றால், அப்போது இத்திருக்கோவில் தனது முக்கியத்துவத்தை இழந்து விடுகிறது—அத்தருணத்தில் இத்திருக் கோவில் இடிக்கப்பட வேண்டும் என்று இதன் கல்வெட்டுகளில் நாம் எழுதப் போகிறோம்.

தூய பக்தர்களுக்கு மாபெரும் கோவில்கள் அவசியமில்லை, சிறிய கோவிலும் அவசியமில்லை, ஹரி நாமம் மட்டுமே போதுமானது. இருப்பினும், பிரம்மாண்டமான கோவில்கள் இருக்கும்பட்சத்தில் மக்கள் அதனைக் காண அங்கு வருவர், அத்தருணத்தில் பகவத் கீதையின் செய்தியை அதன் உண்மையுருவில் பக்தர்கள் மக்களுக்கு வழங்கவியலும்.

இத்திருக்கோவில் சேலம் மாநகர வாசிகளுக்கு மட்டுமின்றி அனைவருக்குமே ஒரு மாபெரும் பொக்கிஷம். வாரம் ஒருமுறை நடைபெறும் ஞாயிறு நிகழ்ச்சிகளில் நீங்கள் அனைவரும் கலந்துகொள்ள முயற்சி செய்யுங்கள், முடிந்தால் இதர வார நாள்களிலும் வாருங்கள், தினமும் வாருங்கள், காலை மாலை என்று இருவேளையிலும் வாருங்கள், திரும்பிச் செல்லாதபடி எங்களுடன் தங்குவதற்கும் வாருங்கள்.





**மேலே:** பூமி பூஜையின் சடங்குகள், ஆதிசேஷரை பூமிக்கு அடியில் பிரதிஷ்டை செய்தல்;
**இடது:** புதிதாகக் கட்டப்படவிருக்கும் திருக்கோவிலின் வரைபடம்

# அவதாரம்

## இறங்கி வருபவர்



இக்கட்டுரை தங்களை அணுகும் இத்தருணத்தில் ஹாலிவுட்டின் "அவதார்" திரைப்படம் அனைவரும் அறிந்ததாக இருக்கும். சுமார் 1000 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் சமஸ்கிருத வார்த்தையை பெயராகக் கொண்டு அமைந்துள்ளது; இருப்பினும், இத்திரைப்படத்திற்கும் வேத சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ள அவதாரங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

வழங்கியவர்: திரு. சியாமானந்த தாஸ்

இத்தலைப்பு குறித்து இயக்குனர் ஜேம்ஸ் கேமரின் பேசுகையில், "அவதார் என்னும் வார்த்தை இந்து மதத்தைச் சார்ந்தது, சிவனைப் போன்ற தெய்வீக நபர்கள் ஜடவுடலுடன் வருதல் என்பது இச்சொல்லின் பொருள். இத்திரைப்படம், அந்த தெய்வீக நபர்களின் உணர்வுகளை தனது உடலுக்குள் ஏற்றுக்கொள்ளும் உயிர்வாழும் மனிதனை அவதாரமாகச் சித்தரித்து எடுக்கப்பட்டுள்ளது."

அவதாரம் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள முயற்சி செய்திருக்கும் ஜேம்ஸ் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம்; தனது சொந்த கற்பனையால் இதைப் புரிந்துகொள்ள அவர் எடுத்த முயற்சியை வாய்ப்பாகப் பயன்படுத்தி, அவதாரம் என்றால் என்ன என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

### அவதாரம், ஜடவுடல் அல்ல

கிருஷ்ணர் (விஷ்ணு) தனது ஆன்மீக உலகத்திலிருந்து ஜடவுலகிற்குள் இறங்கி வரும்போது, அவரது தோற்றம், அவதாரம் என்று அழைக்கப்படுகிறது. அவதாரம் (இறங்கி வருபவர்) என்னும் சமஸ்கிருத வார்த்தை, ஆங்கிலத்தில் incarnation (carnis என்றால் சதை, incarnation என்றால் "சதையுடன் கூடிய உடலை ஏற்றுக்கொள்பவர்" என்று பொருள்) என்று அடிக்கடி மொழிபெயர்க்கப்படுவதுண்டு. அவ்வாறு ஜடப் பொருள்களால் ஆன உடலில் கிருஷ்ணர் தோன்றுகிறார் என்று நினைத்தல் மாபெரும் தவறாகும். ஜடப் பொருள்களுக்கும் கடவுளின் சுய ஆன்மீக இயற்கைக்கும் இடையிலான வேறுபாடு பகவத் கீதையில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்கள் தற்காலிகமானவை, அழியக்கூடியவை. ஆனால், கிருஷ்ணரின் இயற்கையோ, நித்தியமானது, வீழ்ச்சியடையாதது, நம்மால் காண இயலாது. இருப்பினும், கடவுள் தன்னுடைய கருணையினால் இங்கு இறங்கி வரும்போது மட்டும், காண இயலாத அவரை நம்மால் காண முடியும்.

### கேமரினின் குழப்பம்

கேமரின் தொடர்ந்து கூறுகிறார், "கண்ணால் மாற்று உலகங்களை பார்ப்பதைக் காட்டிலும், உயிருள்ள சுவாசிக்கும் உடலை நான் காட்ட

விரும்பினேன். அதன்படி, நீங்கள் உங்களது மனித உடலுடன் உறங்கச் சென்று அவதார் உடலுடன் எழுந்திருப்பீர். அந்த உடல் உறங்கச் செல்லும்போது, மனித உடலுடன் விழித்துக் கொள்வீர். அதன் பின்னர் மீண்டும் ஓய்வெடுப்பீர்.''

குழப்பும் கற்பனைக் கருத்துகள் போதும்! ஆன்மீகத்தை பொழுதுபோக்குத் துறையிடமிருந்து கேட்டது போதும்! வேத சாஸ்திரங்களிலிருந்து உண்மையை அறிந்து கொள்வோம்.

## எத்தனை அவதாரங்கள்?

கடவுளுக்கு பல்வேறு அவதாரங்கள் உண்டு. கடவுள் ஒருவரே என்றபோதிலும், அவரது அவதாரங்கள் எண்ணற்றோர். இந்தியாவில் பொதுவாக, மச்ச, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, புத்த, கல்கி ஆகிய பத்து அவதாரங்கள், தசாவதாரம் என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றனர்.

## கடவுள் அவதரிப்பதற்கான காரணம்

ஸ்ரீல பிரபுபாதர் தனது பகவத் கீதை (4.7) உரையில் எழுதுகிறார், ''தர்மத்தின் மிகவுயர்ந்த கொள்கை தன்னிடம் சரணடைவதேயன்றி வேறொன்றுமில்லை என்பதை கீதையின் முடிவில் பகவான் நேரடியாக ஆணையிடுகிறார். வேதக் கொள்கைகள், அவரிடம் முழுமையாக சரணடைவதை நோக்கி ஒருவனைக் கொண்டு செல்கின்றன; அக்கொள்கைகள் அசுரர்களால் துன்புறுத்தப்படும்போது பகவான் தோன்றுகிறார்... பகவானின் ஒவ்வொரு குறிப்பிட்ட அவதாரத்திலும் குறிப்பிட்ட நோக்கம் உண்டு, இவையனைத்தும் சாஸ்திரங்களில் விளக்கப்பட்டுள்ளன. சாஸ்திரங்களில் குறிப்பிடப்படாத எவரையும் அவதாரமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது... சில சமயங்களில் அவர் தாமே வருகிறார், சில சமயங்களில் அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியை மகன் அல்லது சேவகனின் வடிவில் அனுப்புகிறார், அல்லது வேறு சில சமயங்களில் அவரே மறைக்கப்பட்ட உருவில் தோன்றுகிறார்.

## கடவுள் பௌதிக உடலை ஏற்கின்றாரா?

உருவம் என்றால் அதற்கு ஒரு வரம்பு உள்ளது என்று சிலர் நினைக்கின்றனர். கடவுள் வரம்புகளற்று எங்கும் நிறைந்தவர் என்பதால், அவருக்கு உருவம் கிடையாது என்று அவர்கள் வாதிடுகின்றனர். கடவுள் இந்த ஜடவுலகத்திற்குள் அவதார ரூபத்தில் வரும்போது, இடத்திற்கும் காலத்திற்கும் உட்பட்டு இருப்பதால், அந்த ரூபம் கடவுளின் உண்மை உருவமாக இருக்க முடியாது என்றும் கடவுளின் ஓர் அறிகுறியே என்றும் அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், கடவுளின் உருவம் வரம்பிற்கு உட்பட்டதல்ல; உருவம் என்பது குறித்த நமது அறிவு மட்டுமே வரம்பிற்கு உட்பட்டது. ஏனெனில், நமது அறிவு கண்ணால் காண்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. ஆன்மீகமான கடவுளின் உருவம் மிகவும் சூட்சுமமானது என்பதால், அவரது எங்கும் வீற்றிருக்கும் தன்மைக்கும் உருவத்திற்கும் எந்தவித முரண்பாடும் இருக்க முடியாது. உருவத்துடன் இருப்பதால், எங்கும் பரவியிருத்தல் என்னும் கடவுளின் தன்மை பாதிக்கப்படுவதில்லை. ஆன்மீகமான இறைவனின் அந்த உருவத்தை சாதாரண சதையினால் ஆன உடலுடன் ஒப்பிடுதல் முற்றிலும் பொறுத்தமற்றது. என்றும் இளமையாக விளங்கும் அவரது ரூபம், நித்தியமானது, அறிவு நிறைந்தது, மற்றும் ஆனந்தமயமானது.

## நாமும் அவதாரமா? அல்லது நாமும் அவதாரம் எடுக்க முடியுமா?

உடல் பெற்ற எல்லா நபர்களும் அவதாரங்களே என்று சிலர் வாதிடுகின்றனர். அவதார் திரைப்படமும் இக்கருத்தினை உரைக்கின்றது. இந்தியாவிலும் உலகின் இதர பகுதிகளிலும் தங்களையே அவதாரமாகக் கூறுவோர் எண்ணற்றோர். ஆனால் அவர்களில் யாருமே வேத சாஸ்திரங்களால்அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்ல. ஒருவன் தன்னை அவதாரமாகக் கூறிக் கொள்ளலாம், ஆனால் கடவுள் அவதரிக்கும் போது செய்யக்கூடிய மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களை அவன் வெளிப்படுத்த வேண்டும். ''நான் கடவுள்'' என்று வாயால் சொல்லிவிடுதல் எளிமை, கடவுளின் செயல்களைச் செய்ய வேண்டுமே!

## விரக்தியை உருவாக்கும் அவதார்


திரைப்படத்தில் பார்த்ததை உண்மையாகக் கருதும் ரசிகர்கள், படத்தில் கண்ட அற்புத உலகின் அழகினை அனுபவிக்க விரும்புகின்றனர், அஃது இயலாததால் விரக்தியடைகின்றனர். அத்தகு மனஅழுத்தம், விரக்தி குறித்து ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது கருத்துகளை இணையத்தில் பரிமாறிக் கொள்கின்றனர் என்று CNN இணையதளம் கூறுகின்றது. ரசிகர்களில் பலர், அந்த அற்புத (கற்பனை) உலகத்தைக் கண்ட பின்னர், சாதாரண வாழ்வில் ஆர்வமற்றவர்களாக உள்ளனர். தற்கொலை செய்து கொண்டு, அவதார் உடலை அடையலாம் என்றுகூட பலர் நினைக்கின்றனர். மனோதத்துவ நிபுணர்களோ கண்களால் காண்பவற்றை எல்லாம் நிஜ வாழ்வில் எதிர்பார்க்கக் கூடாது என்று அறிவுறுத்தி வருகின்றனர்.

**சாஸ்திரங்களில் குறிப்பிடப்படாத எவரையும் அவதாரமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது**

## உண்மையான அற்புத உலகம்

திரைப்படத்தில் காண்பிக்கப்படும் அற்புத உலகம் கற்பனையானது, பொய்யானது. அந்த உலகத்தைக் காட்டிலும் பல மடங்கு உயர்ந்த உண்மையான உலகத்தைப் பற்றிய தகவல் சாஸ்திரங்களில் உள்ளது. அங்கு நாம் உண்மையிலேயே செல்ல முடியும். அதுவே ஆன்மீக உலகம், இறைவனின்





**மேலே:** அவதார் திரைப்படத்தின் கற்பனை உலகம்

**இடது:** உண்மையான ஆன்மீக உலகம்

வசிப்பிடம்; மேலும், நமது உண்மையான வீடும் அதுவே.

ஆன்மீக உலகில் வசிப்பவர்கள் பிரகாசமான நீல நிற மேனியுடையவர்கள். அவர்களது கண்கள் தாமரையைப் போன்றவை, மஞ்சள் நிற உடையில் தோன்றும் அவர்களது உடல் அங்கங்கள் மிகவும் வசீகரமானவை. என்றுமே பொங்கும் இளமையுடன் இருக்கும் அவர்கள், நான்கு கரங்களுடன், தங்கம், முத்து, வைரம் போன்றவற்றால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து மேலும் பிரகாசமாகத் தோன்றுகின்றனர். அவர்களது நடைகளும் நடனமே, பேச்சுகளும் பாடல்களே. அங்குள்ள மரங்கள் வேண்டியதை கொடுப்பவை. இந்த வர்ணனைகள், வேதங்களில் காணப் படுவதன் ஒரு சிறு துளியே ஆகும்.

ஆன்மீக உலகை விரும்பும் பக்தர்களுக்கு, ஒருபோதும் தற்கொலை எண்ணமோ மன அழுத்தமோ ஏற்பட்டதில்லை என்பதை கவனித்தல் மிகவும் அவசியம். ஏனெனில், அவர்கள் உண்மை அவதாரத்தின் வசிப்பிடமான ஆன்மீக உலகினைப் பற்றி மட்டுமே படிக்கின்றனர், கேட்கின்றனர், தியானிக்கின்றனர்; போலி அவதாரத்தின் (?) கற்பனை உலகத்தைப் பற்றி அல்ல.

திரு. சியாமானந்த தாஸ் அவர்கள், மும்பையிலிருந்து வெளிவரும் Back to Godhead ஆங்கில பதிப்பின் தொகுப்பாசிரியராக தொண்டு புரிந்து வருகிறார்.

# மதுராவில் வசித்தல்

பக்தித் தொண்டின் அறுபத்தி நான்கு அங்கங்களை ஸ்ரீல ரூப கோஸ்வாமி அவர்கள் தனது படைப்பான பக்தி ரஸாம்ருத சிந்துவில் குறிப்பிட்டுள்ளார், அவற்றிலுள்ள ஐந்து அங்கங்கள் (திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், வைஷ்ணவர்களின் சங்கம், விக்ரஹ ஆராதனை, மதுராவில் வசித்தல் ஆகியவை) மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும், அவற்றின் மீதான ஓரளவு பற்றுதலும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சென்ற இதழ்களில், திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், விக்ரஹ ஆராதனை ஆகியவற்றைக் கண்டோம். தற்போது, மதுராவில் வசித்தல் என்பது குறித்து அறியலாம்.

வழங்கியவர்: திரு. ஜெய கோபிநாத தாஸ்

*தாமம்* என்னும் சமஸ்கிருத வார்த்தையை புனித ஸ்தலம், அதாவது முழுமுதற் கடவுளின் வசிப்பிடம் என்று கூறலாம். பகவானின் வசிப்பிடமானது, அவரது நாமம், ரூபம், குணம் மற்றும் லீலைகளிலிருந்து வேறுபட்டதல்ல. பகவான் எவ்வாறு வழிபடத்தக்கவரோ, அவ்வாறே அவரது வசிப்பிடமும் வழிபடத்தக்கதாகும். பல்வேறு ரூபங்களில் வீற்றுள்ள பகவானுக்கு பல தரப்பட்ட வசிப்பிடங்கள் உள்ளன. அவையனைத்தும் திவ்யமானவை, அவரைப் போன்றே தெய்வீகத் தன்மைகளைக் கொண்டவை.

## ஆன்மீக உலகின் தன்மைகள்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது வசிப்பிடத்தைப் பற்றி பகவத் கீதையில் (15.6) பின்வருமாறு கூறுகிறார்: "எனது அந்த உயர்ந்த இருப்பிடம், சூரியனாலோ, சந்திரனாலோ, நெருப்பினாலோ, மின்சாரத்தாலோ ஒளியூட்டப்படுவது இல்லை. அதனை அடைபவர்கள் ஒருபோதும் இந்த ஜடவுலகிற்குத் திரும்புவதில்லை." அத்தகு சிறப்புமிக்க கோலோக விருந்தாவனத்தை, பிரம்ம சம்ஹிதையில் (5.29) பிரம்மதேவர் பின்வருமாறு விவரிக்கின்றார்: "விலை மதிப்பற்ற சிந்தாமணிக் கற்களால் அமைக்கப்பட்டுள்ள முழுமுதற் கடவுளின் வசிப்பிடத்தில், விரும்பியதை வழங்கும் கற்பக மரங்கள் நிறைந்துள்ளன. சுரபிப் பசுக்களை பராமரிக்கும் ஆதி புருஷரான கோவிந்தர் அங்கு இலட்சக்கணக்கான கோபியர்களால் தொண்டு செய்யப் படுகிறார்."



கோவர்தன மலையில் வலம் வரும் ஸ்ரீ கிருஷ்ணர் அங்கிருந்தபடி ஸ்ரீமதி ராதாராணியிடம் ராதா குண்டத்தை காட்டுதல்

## ஜடவுலகினுள் ஆன்மீக உலகம்

இந்த பௌதிக உலகில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வசிப்பிடமாகத் திகழும் மதுரா, விருந்தாவன், துவாரகை போன்ற புனித ஸ்தலங்கள், மேலே விவரிக்கப்பட்ட ஆன்மீக உலகின் மாதிரிகளாக (நகல்களாக) இருப்பதால், பௌதிக சக்தியின் தாக்கம் இங்கு இருப்பதில்லை. இப்புனித ஸ்தலங்களில், பகவான் என்றும் வீற்றுள்ளார்; ஆன்மீக உணர்வில் முன்னேற்றமடைந்த பக்தர்கள், இன்றும் பகவானின் லீலைகளை இங்கே காணவும் அனுபவிக்கவும் முடியும். அவ்வாறு முன்னேற்றமடையாத நிலையில் இருப்பவர்கள், அந்நிலையை நோக்கி விரைவில் உயர்வு பெற இப்புனித ஸ்தலங்களில் வசித்தல் பேருதவியாக அமையும். இப்புனித ஸ்தலங்களில் பகவானின் பலதரப்பட்ட லீலைகள் நிகழ்ந்த காரணத்தினால், பகவானை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது இத்தகு இடங்களில் எளிதானதாகும்.

## புனித ஸ்தலங்களின் உயர்நிலை


எவ்வாறு தனது இனிமையான தன்மையின் காரணத்தினால், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மற்ற எல்லா விஷ்ணு ரூபங்களைக் காட்டிலும் சிறந்தவராகக் கருதப்படுகின்றாரோ, அதுபோலவே, எல்லா புனித ஸ்தலங்களிலும், வைகுண்டத்தைக் காட்டிலும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த மதுரா மண்டலம் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. மதுரா மண்டலத்தினுள் உள்ள விருந்தாவனம், கிருஷ்ணரின் ராஸ லீலை நடைபெற்ற காரணத்தினால், மதுரா நகரத்தைக் காட்டிலும் உயர்ந்தது. அந்த விருந்தாவனத்தில்தான், பகவான் தன்னுடைய நண்பர்கள், தாய் தந்தையர், மற்றும் தோழியருடன் லீலை புரிகின்றார். விருந்தாவனக் காட்டில் அமைந்துள்ள கோவர்தன மலை, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் உயர்த்தப்பட்ட காரணத்தினாலும் பல்வேறு லீலைகள் நிகழ்ந்த காரணத்தினாலும், விருந்தா வனத்தை விட உயர்ந்ததாகும். இவை யனைத்திற்கும் மேலாக, கோவர்தன மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள, கிருஷ்ண பிரேமை பொங்கி வழியும் ஸ்ரீ ஸ்ரீராதா குண்டம் மிகமிக உயர்ந்ததாகும். (மேலும் விபரங்களுக்கு, ஸ்ரீல பிரபுபாதர் அருளிய "உபதேசாமிருதம்" என்னும் புத்தகத்தைப் படிக்கவும்.)


## விருந்தாவனமும் நவத்வீபமும்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தற்போதைய கலி யுகத்தில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் வடிவில் வங்காளத்திலுள்ள நவத்வீபத்தில் அவதரித்தார். (சைதன்ய மஹாபிரபு குறித்த விவரங்களுக்கு நான்காம் பக்கத்தில் உள்ள கட்டுரையைப் படிக்கவும்) எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணருக்கும் ஸ்ரீ சைதன்யருக்கும் வேறுபாடு இல்லையோ, அவ்வாறே கிருஷ்ண லீலைகள் நடைபெற்ற விருந்தாவனத்திற்கும் சைதன்ய லீலைகள் நடைபெற்ற நவத்வீபத்திற்கும் வேறுபாடு கிடையாது. கௌடிய வைஷ்ணவர்களுக்கு விருந்தாவனமும் நவத்வீபமும் ஒன்றே. அதே சமயத்தில், பகவான் ஸ்ரீ சைதன்யர் எல்லா அவதாரங்களிலும் மிகமிக கருணை வாய்ந்தவர் என்பதால், அவரது புனித ஸ்தலமும் அவரைப் போன்றே கருணையின் இடமாகத் திகழ்கின்றது.


## மறைக்கப்பட்டுள்ள விருந்தாவனம்

பௌதிக கண்ணோட்டமுள்ளவர்கள் விருந்தாவனத்தை பொருளாதார வளர்ச்சி ஏற்படாத இடமாகவும், அசுத்த மான இடமாகவும் காண்கின்றனர். அவர் களுக்கு விருந்தாவனத்தின் ஆன்மீகத் தன்மை வெளிப்படாது. அத்தகு பௌதிக வாதிகள் விருந்தாவனத்தில் நடமாடும் பட்சத்தில், அவர்கள் மாயாதேவியால் விரிக்கப்பட்டுள்ள வலையின் மீதே நடமாடுகின்றனர் என்று ஸ்ரீல





**இடது:** கோவர்தன மலையின் தற்போதைய தோற்றம்; **வலது:** ஸ்ரீ ராதா குண்டம்;
**எதிர்பக்கம்:** விருந்தாவனத்திலுள்ள இஸ்கான் கோவிலின் பிரம்மாண்டத் தோற்றம்
(**உட்படம்:** அங்கு வீற்றிருக்கும் ஸ்ரீஸ்ரீ கிருஷ்ண பலராமர்)



பக்திவினோதர் கூறுகின்றார். அவர்களால் விருந்தாவனத்தின் உட்புறத்திற்கு ஒருபோதும் செல்ல இயலாது என்றும் உரைக்கின்றார். தூய பக்திப் பாதையில் இருப்பவர்கள்மட்டுமேவிருந்தாவனத்தின் மகிமையை உணர முடியும்.

## விருந்தாவனத்தில் வசித்தல்

முன்னரே கூறப்பட்டதுபோல, புனித ஸ்தலத்தில் வசிப்பது ஆன்மீக முன்னேற்றத்திற்கு மிகவும் உதவியாக அமையும் என்பதால், விருந்தாவனத்தில் வசிப்பதை இறையன்பை கொடுக்கும் ஐந்து சக்தி வாய்ந்த அங்கங்களில் ஒன்றாக ஸ்ரீல ரூப கோஸ்வாமி குறிப்பிடுகிறார். அவ்வாறு விருந்தாவனத்திற்குச் சென்று உடல் ரீதியாக அங்கு வசிப்பது என்பது நடைமுறையில் எல்லாருக்கும் சாத்தியமானதல்ல என்பதால், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சார்பில் அக்டோபர்-நவம்பர் மாதத்தில் விருந்தாவனத்திலும், பிப்ரவரி-மார்ச் மாதத்தில் நவத்வீபத்தின் மாயாப்பூரிலும் மாபெரும் திருவிழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, உயர்ந்த வைஷ்ணவர்களின் சங்கத்திற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

## எங்கும் விருந்தாவனம்

நமது ஜடவுடலை விருந்தாவனத் திற்குக் கொண்டு சென்றால் மட்டுமே விருந்தாவனத்தில் வசிப்பதன் பலனை அடைய முடியும் என்று நாம் நினைத்துவிடக் கூடாது, ஸ்ரீல நரோத்தம தாஸ் தனது பாடல் ஒன்றில், தோமாரா ஹ்ருதயே சதா கோவிந்த விஸ்ராம், அதாவது, தூய வைஷ்ணவர்களின் இதயத்தில் எப்பொழுதும் கோவிந்தர் வீற்றுள்ளார் என்று கூறுகிறார். எனவே, தூய பக்தர்கள் எங்கெல்லாம் செல்கின்றனரோ, அங்கெல்லாம் அவர்கள் தங்களது இதயத்தில் விருந்தாவனத்தை சுமந்து செல்கின்றனர்; மேலும், தாங்கள் செல்லுமிடங்கள் அனைத்தையும் விருந்தாவனமாக மாற்றுகின்றனர். இதையே நமது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் செய்தார். தான் சென்ற எல்லா இடங்களிலும் கிருஷ்ணருக்காக ஒரு இடத்தை ஏற்பாடு செய்து, அவ்விடத்தை விருந்தாவனமாக்கினார். அங்கே எப்பொழுதும் கிருஷ்ணரின் புகழ்ச்சியை சொல்வதற்கும் கேட்பதற்கும் வழிவகுத்தார். இதனால், ஒரு விதத்தில் பார்த்தால், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அனைத்து மையங்களும் விருந்தாவனமே.

''வைஷ்ணவ சங்கம்,'' அடுத்த இதழில்

**ஜெய கோபிநாத தாஸ்** B.E, அவர்கள் இஸ்கானின் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாக தொண்டாற்றி வருகிறார்.



# மூளையற்ற சமுதாயம்

## ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு சவால்

(1974 ஆம் ஆண்டின் மே மாதத்தில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தைச் சார்ந்த சார்லஸ் ஹென்னிஸ் என்பவருக்குமிடையே ஜெனீவாவில் நிகழ்ந்த உரையாடல்)

**ஹென்னிஸ்:** ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த சர்வதேச தொழிலாளர் நிறுவனத்திற்காக நான் பணிபுரிகிறேன். உலக நாடுகள் அனைத்திலும் உள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காகவும் நன்மைக்காகவும் நாங்கள் பாடுபடுகிறோம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** வேத இலக்கியம் நான்கு சமுதாயப் பிரிவுகளை விளக்குகின்றது—அறிவாளிகள், நிர்வாகிகள், வர்த்தகர்கள், மற்றும் தொழிலாளர்கள். தொழிலாளர்கள், சமுதாயம் என்னும் உடலின் கால்களாக செயல்படுகின்றனர்; ஆனால் கால்கள் தலையினால் வழிகாட்டப்படுதல் அவசியம். சமூக உடலின் தலையைப் போன்றோர், அறிவாளி பிரிவினர். சமூக உடலின் கால்களுக்கு மட்டும் ஐக்கிய நாடுகள் சபை தனது கவனத்தை செலுத்துகிறது. ஆனால், மூளைக்காக, அறிவாளிகளுக்காக அவர்கள் என்ன செய்கிறார்கள்?

**ஹென்னிஸ்:** சமுதாயத்தின் பொருளாதார இலாபத்தில் உழைப்பாளிகள் தங்களது சரியான பங்கைப் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆனால் எனது கருத்து என்னவெனில், சமுதாயத்தின் தலையை ஒதுக்கிவிட்டு கால்களுக்கு எவ்வளவு கவனத்தைச் செலுத்தினாலும், அதன் விளைவு சரியாக அமையாது. ஏனெனில், மூளை சரியான நிலையில் இருக்காது.


**ஹென்னிஸ்:** ஆனால் இதுவும் சமூகத்தின் முக்கிய அங்கம் என நீங்கள் நினைக்கவில்லையா? உலகிலுள்ள தொழிலாளர்களை முன்னேற்றுவதே எங்களது குறிக்கோள்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அமெரிக்காவிலுள்ள தொழிலாளர்களுக்கு அதிக அளவில் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால், புத்திசாலி வகுப்பினரால், அதாவது மூளையினால் வழிகாட்டப்படாததால், அவர்கள் வீணாகக் குடித்து தங்களது பணத்தை விரயமாக்குகிறார்களே!

**ஹென்னிஸ்:** நல்லவை தவறாக உபயோகப்படுத்தப்படும்போது, அவை கெட்டவையாகி விடுவதில்லை என்பதே உண்மை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நான் சொல்வது என்னவெனில், ஒவ்வொருவரும் மூளையினால் வழிகாட்டப்படவேண்டும். சமுதாயத்தை ஒழுங்குபடுத்த அதுவே வழி. புத்தியின்றி, கழுதைபோல கடினமாக உழைப்பதால் என்ன பயன்?

**ஹென்னிஸ்:** மனிதனிடம் அவனது மூளையை



பயன்படுத்தும்படி கட்டாயப்படுத்த முடியாது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அதனால்தான், சமூகத்தின் மூளையாகச் செயல்படக்கூடிய சீர்மிகு அறிவாளிகளின் பிரிவை ஐக்கிய நாடுகள் ஆதரிக்க வேண்டும். அவர்களின் வழிகாட்டுதலால் அனைவரும் மகிழ்ச்சி அடையலாம்.

**ஹென்னிஸ்:** தத்துவம் அறிந்த தலைவர்களின் பிரிவு, அதாவது பாதிரியார்களின் பிரிவு உலகிலுள்ள எல்லா சமுதாயத்திலும் ஏற்கனவே இருக்கின்றது என நான் நினைக்கிறேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பாதிரியார்களா! "கொல்லாதிருப்பாயாக" என்று பைபிள் கூறுகிறது. ஆனால் பாதிரியார்கள் அதனை தங்களுடைய சொந்த விருப்பத்திற்கேற்ப மாற்றிவிட்டார்கள். அவர்கள், ஆயிரக்கணக்கில் அப்பாவி மிருகங்களைக் கொல்லும் பெரும் கசாப்புக் கூடங்களுக்கு அனுமதியளித்து, கொலை செய்வதை ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்தகு பெயரளவு பாதிரியார்கள் எப்படி வழிகாட்ட முடியும்? எத்தனையோ கிருஸ்துவ பாதிரியார்களிடமும், பெரியவர்களிடமும் இதுகுறித்து, "உங்களது பைபிளில், 'கொல்லாதிருப்பாயாக' எனக் கூறப்படும் போது, நீங்கள் ஏன் இந்த கட்டளையை மீறுகின்றீர்?" என்று நான் கேட்டுள்ளேன். அவர்கள் எனக்குத் தெளிவற்ற பதிலையே தருகின்றனர். பாவச் செயல்கள் எவை என்பதைக்கூட அவர்கள் மக்களுக்கு கற்பிப்பதில்லை. சமுதாயத்தில் மூளைகள் போதுமானதாக இல்லை என்பதே இதன் பொருள்.

**ஹென்னிஸ்:** எனது நிறுவனம் மக்களின் மூளைகள் குறித்து நேரடியாக கவனம் செலுத்துவதில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** உங்கள் நிறுவனம் நேரடியாக ஈடுபடாமல் இருக்கலாம். ஆனால், மனித சமுதாயம் மூளையின்றி இருந்தால், நீங்கள் எந்த நிறுவனத்தை ஆரம்பித்தாலும் மக்கள் ஒருபோதும் மகிழ்வுடன் இருக்க முடியாது. நல்ல செயல்களையும் தீய செயல்களையும் எவ்வாறு வேறுபடுத்துவது என்பதை புத்திசாலி வகுப்பினர் பொதுமக்களுக்கு கற்பிக்காவிடில், அம்மக்கள் மிருகங்களை விட மேலானவர்கள் அல்ல.

**ஹென்னிஸ்:** இருக்கலாம். நீங்கள் நல்ல செயல்களுக்கும் பாவச் செயல்களுக்கும் உள்ள வேற்றுமையைப் பற்றி பேசும் போது...



**மேலே:** பணம் சம்பாதிக்கும் தொழிலாளர்கள் முறையான வழிகாட்டுதல் இல்லாததால் பணத்தை குடித்து விரயமாக்கும் காட்சி

**ஸ்ரீல பிரபுபாதர்:** அவர்கள் இதுபோன்ற வேறுபாடுகள் எதையும் தற்போது பார்ப்பதில்லை. ஆனால் எங்களது கிருஷ்ண பக்தி இயக்கத்தில் நாங்கள் எங்களது மாணவர்களிடம் பாவச் செயல்களை தவிர்க்கும்படி ஆரம்பத்திலேயே போதிக்கின்றோம். புலால் உண்ணுதல், சூதாடுதல், தகாத உடலுறவு கொள்ளுதல், போதைப் பொருள்களை உபயோகித்தல் ஆகியவற்றை அவர்கள் முற்றிலுமாக கைவிட வேண்டும். அவர்களது குணத்தையும் நடத்தையையும் மற்றவர்களது குணங்களுடன் ஒப்பிட்டு பாருங்கள். கிருஸ்துவ பாதிரியார்கள் கூட ஆச்சரியப்படுகின்றனர். "இந்த மாணவர்கள் எங்களது மாணவர்கள். உங்களது இயக்கத்தில் இணைவதற்கு முன்பு இவர்கள் தேவாலயத்திற்கு வந்ததே இல்லை, ஆனால் தற்போது இவர்கள் கடவுள் மீது பைத்தியமாகி விட்டார்களே?" என்று அவர்கள் கூறுகின்றனர். தெருக்களிலுள்ள மக்கள், "நீங்கள் அமெரிக்கர்களா என்ன?" எனக் கேட்கின்றனர்.

நெறியான வழிகாட்டுதலால் எதையும் சரிப்படுத்தலாம் என்பதை இதில் கவனியுங்கள். ஆனால், மூளையற்ற சமுதாயத்தில், நீங்கள் எவ்வளவுதான் நிறுவனங்களை ஏற்படுத்தினாலும், மனிதர்களின் துன்பங்களுக்கு முடிவே கிடைக்காது. இதுவே இயற்கையின் விதியாகும்: மக்கள் பாவிகளாக இருக்கும்வரை, அவர்கள் துன்பப்படுவது நிச்சயம்.

**ஹென்னிஸ்:** மக்களுக்கு போதனை செய்வதற்காக சர்வதேச நிறுவனம் ஒன்றை நீங்கள் எதிர்பார்ப்பது சாத்தியமாக எனக்குத் தோன்றவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஏன் முடியாது? இது சர்வதேச நிறுவனமாகத்தான் இருக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை என்பது சர்வதேச செயல்களுக்கானது. ஆகவே, எங்களது அறிவுரை என்னவெனில், சமுதாயத்தில் அறிவுடன் செயல்படும் முதல்தர புத்திசாலிகளைக் கொண்டு ஒரு சர்வதேச இயக்கத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் சமுதாயத்தின் மூளையாகச் செயல்படுவர்.

அப்போது மக்கள் மகிழ்வுடன் வாழ முடியும். ஆனால், வழிகாட்டுதலின்றி, மூளையின்றி, வெறும் கால்களையும் கைகளையும் வேலை செய்ய வைத்தால், நீங்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டீர்கள்.

**ஹென்னிஸ்:** மக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும், உலகைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ளவும் உதவும் ஒரு மனிதகுலத் தொண்டனாக நான் என்னை கருதுகின்றேன். தொழிலாளர்களின் கல்விக்குத் தேவையான திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு நான் தற்போது முயற்சி செய்து வருகின்றேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆனால், தயவுசெய்து இதனைப் புரிந்து கொள்ளுங்கள். சமூகத்தின் மூளையைப் பற்றி நான் வலியுறுத்துகின்றேன். முன் மாதிரியான மனிதர்கள் இல்லாவிடில், அதாவது, மூளை சரியாக இல்லாதபட்சத்தில், நீங்கள் கல்வியையும் நிறுவனங்களையும் எவ்வளவுதான் உருவாக்கினாலும், அது வெற்றிகரமாக அமையாது. ஐக்கிய நாடுகள் சபை என்பது அனைத்து மனித சமுதாயத்திற்குமான ஒரு நிறுவனம், ஆனால் அந்த நிறுவனத்தின் மூளை இதுவே என்று கூறும்படி எந்த ஒரு பிரிவும் உண்மையில் இல்லை.

**ஹென்னிஸ்:** அஃது உண்மைதான்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுவே எனது கருத்து.

**ஹென்னிஸ்:** இந்த சபையில் அங்கம் வகிக்கக்கூடிய நாடுகளின் தலைவர்களுக்கு நாங்கள் வேலைக்காரர்களாகத்தான் இருக்கின்றோம். திரு. நிக்ஸன் அவர்களுக்கும் இதர நாட்டின் தலைவர்களுக்கும் மூளையில்லாத பட்சத்தில், அவர்களது மூளையை வளர்க்க ஐக்கிய நாடுகள் சபையினால் ஏதும் செய்ய முடியுமா என அச்சப்படுகிறேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், உங்களது இந்த மாபெரும் நிறுவனம் வெறும் பிணத்திற்கு செய்யப்படும் அலங்காரமே. மூளையில்லாத உடல் ஒரு பிணமே. பிணத்தை நீங்கள் உங்கள் திருப்திக்கேற்றவாறு அலங்கரிக்கலாம், ஆனால் என்ன பலன்? எது சரி, எது தவறு என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக அறிவுள்ள ஒரு பிரிவினர் சமுதாயத்தில் இல்லையெனில், மூளையற்ற இச்சமுதாயம் பிணத்திற்குச் சமமே. மேலும், நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும், அவையனைத்தும் பிணத்திற்கு செய்யப்படும் பயனற்ற அலங்காரமாகவே விளங்கும்.

# 47 கோடி புத்தகங்கள்

“உனக்குப் பணம் கிடைத்தால் புத்தகங்களை அச்சடித்து விநியோகம் செய்”—ஸ்ரீல பிரபுபாதருக்கு அவரது குருவான பக்திசித்தாந்தர் 1935ல் கொடுத்த கட்டளை. “என்னைத் திருப்திப்படுத்த விரும்பினால், எனது புத்தகங்களை விநியோகம் செய்யுங்கள்,”—ஸ்ரீல பிரபுபாதர் தனது சீடர்களுக்கு திரும்பத் திரும்ப இட்ட கட்டளை. இஸ்கான் ஆரம்பமான நாள்களிலிருந்து இன்றுவரை ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள், பல்வேறு மொழிகளில் அச்சடிக்கப்பட்டு, பக்தர்களால் பெருமளவில் உலகெங்கிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

1965லிருந்து இதுநாள் வரை 47 கோடிக்கும் மேற்பட்ட புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த 2009ம் வருடத்தில் மட்டும் 61 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உலகின் பற்பல மூலை முடுக்குகளையும் தொட்டுள்ளன.

இஸ்கான் புத்தக விநியோகத் துறையின் சர்வதேச அமைச்சர், திரு. விஜய தாஸ் அளித்த தகவல்களில் சில:

* கோவிலுக்கு வெளியில் வசிக்கும் பக்தர்கள் இவ்வருடத்தில் அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர். வாரத்தின் விடுமுறை நாள்களில் அவர்கள் இலட்சக்கணக்கான புத்தகங்களை உலகெங்கிலும் விநியோகித்துள்ளனர்.
* புதுடில்லி கோவில் 7,43,604 புள்ளிகளுடன் இந்த வருடமும் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.




* மிகவும் குளிர் நிறைந்த மாஸ்கோ, இலண்டன் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ள புத்தக விநியோகத்தைப் பார்க்கும்போது, பக்தர்கள் குளிரையும் வெயிலையும் தாண்டியவர்கள் என்பதை உணரலாம்.
* இந்த வருடத்தில் மட்டும் 61 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த 13 வருடங்களில் இதுவே அதிகபட்ச விநியோகம்.
* புத்தக விநியோகம் ஒவ்வொரு வருடமும் அதிகமாகி வருவதில் மிக்க மகிழ்ச்சி, அனைத்தும் ஸ்ரீல பிரபுபாதரின் கருணையே.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 8,273 புள்ளிகளைப் பெற்ற நாகர்கோயில் இஸ்கான், மிகச்சிறிய கோவிலின் பிரிவில் சர்வதேச அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளதும், 64,532 புள்ளிகளைப் பெற்ற சேலம் இஸ்கான், பொதுப் பிரிவில் சர்வதேச அளவில் பதினான்காம் இடத்தைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழக புத்தக விநியோகப் பட்டியல்

| | | |
|---|---|---|
| சேலம் | 64,532 | புள்ளிகள் |
| சென்னை | 30,501 | புள்ளிகள் |
| மதுரை | 16,894 | புள்ளிகள் |
| கோவை | 15,206 | புள்ளிகள் |
| நெல்லை | 12,965 | புள்ளிகள் |
| வேலூர் | 11,507 | புள்ளிகள் |
| நாகர்கோவில் | 8,273 | புள்ளிகள் |

# விஞ்ஞானிகளும் தவறிழைக்கக்கூடிய மனிதர்களே

## IPCC துணைத் தலைவர் ஒப்புதல்

**இலண்டன், ஜனவரி 26:** பூமி வெப்பமாதல் குறித்து ஆராய்ச்சி செய்துவரும் IPCC (Inter-governmental Panel on Climate Change) அமைப்பின் துணைத் தலைவர், திரு. ஜியன் பாஸ்கல் வன் பெர்சேலே, காலநிலை விஞ்ஞானிகளும் மனிதர்களே, மற்றவர்களைப் போல தவறிழைக்கக் கூடியவர்களே என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

இமயமலையின் பனிக்கட்டிகள் 2035ல் முற்றிலுமாக உருகிவிடும் என்னும் தவறான தகவலை அளித்த காரணத்தினால் வெடித்த பெரும் பிரச்சனையின் இறுதியில் அவர் இக்கருத்தினை வெளியிட நேர்ந்துள்ளது.

பெர்சேலே கூறியதாவது, “தவறிழைப்பது மனிதனின் இயல்புதானே? IPCCயும் ஒரு மனித அமைப்புதான். எந்தவொரு மனித அமைப்பும் தவறிழைக்காமல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாங்கள் எங்களால் முடிந்த அளவு முயற்சி செய்கிறோம். வழிமுறைகளை உறுதி செய்து மீண்டும் இந்த தவறு நடக்காமல் பார்த்துக் கொள்வோம். ஆனால் தவறுகளே இல்லாத முடிவைக் கொடுப்பது என்பது எந்தவொரு மனித நிறுவனத்திற்கும் சாத்தியமல்ல.” 2014ல் வெளிவரும் அடுத்த அறிக்கையை தவறின்றி வெளியிட முயற்சி செய்வோம் என்று தொடர்ந்து கூறிய பெர்சேலே, இருப்பினும் எந்தவொரு விஞ்ஞானியும் பக்குவமான அறிக்கைக்கு உத்திரவாதம் அளிக்க முடியாது என்றும் வலியுறுத்தினார்.

### எமது பார்வை

திரு. பெர்சேலே அவர்கள், தாங்கள் மனிதர்கள்தான் என்பதை இப்போதாவது வெளிப்படையாக ஒப்புக் கொண்டதை பாராட்டுகிறோம் என்றபோதிலும், 2000க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளுடன் பொதுமக்களின் கோடிக்கணக்கான வரிப்பணத்தைக் கொண்டு இயங்கும் சர்வதேச அமைப்பான IPCC, ஒரு மாபெரும் தவறைச் செய்து விட்டு, அதனை மனிதனின் இயற்கை என்று காரணம் காட்டுவது வெட்கக் கேடாகும். இந்த விஞ்ஞானிகள், கடவுள் என்னும் உயர்சக்தி இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இல்லையேல், அறிக்கை மேல் அறிக்கை வரும்; இன்று கூறப்படும் உண்மை, நாளை மாறிவிடும். மாற்றங்கள் மட்டுமே விஞ்ஞானிகளின் வாழ்வில் மாற்றமின்றி இருப்பவை.

இதனால்தான், நமது ஆச்சாரியர் ஸ்ரீல பிரபுபாதர், இந்த விஞ்ஞானிகளை நம்பி ஏமாற வேண்டாம் என்றும், வேத சாஸ்திரங்களை நம்பி பக்குவநிலையை அடையுங்கள் என்றும் மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறார். அத்தகு அறிவுரைகளில் ஒன்று:

ஒரு விஞ்ஞானி நிறைய ஆராய்ச்சிகளைச் செய்யலாம், ஆனால் அவர் எவ்வளவுதான் பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும், நமது கண்கள் பக்குவமற்றவை, நமது கண்கள் கண்டுபிடித்த கருவிகளும் பக்குவமற்றவை. அப்படியிருக்கையில், பக்குவ அறிவைப் பெறுவது எவ்வாறு சாத்தியம்? எந்தப் புலன்களைக் கொண்டு ஒரு விஞ்ஞானி அறிவைப் பெறுகின்றானோ, அப்புலன்கள் வரம்பிற்கு உட்பட்டவை, பக்குவமற்றவை. அறியாமையில் இருக்கும் விஞ்ஞானி வேண்டுமானால் தன்னை எல்லாவற்றையும் அறிந்தவனாக கூறிக் கொள்ளலாம், ஆனால் அது வெறும் அபத்தமே! ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டினால், இருவருமே சாக்கடையில் விழ வேண்டியதுதான். மாறாக, நாங்களோ சாஸ்திரங்களிலிருந்து அறிவைப் பெறுகிறோம், சாஸ்திரங்களின் அறிவு பக்குவமானது. (தன்னையறியும் விஞ்ஞானம், அத்தியாயம் 6, நவீன அறிவியலின் சிறிய உலகம்)

### கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**மார்ச்**

1—ஸ்ரீ ஜகன்னாத மிஸ்ரர் பண்டிகை

8—ஸ்ரீவாஸ பண்டிதர் தோன்றிய நாள்

10—பாபமோசனி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:24–10:24

21—ஸ்ரீ இராமானுஜாசாரியர் தோன்றிய நாள்

24—ஸ்ரீ இராம நவமி, பகவான் ஸ்ரீ இராமர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

27—கமட ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:15–10:19

**ஏப்ரல்**

10—வருதினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:06–10:13

14—ஸ்ரீ கதாதர பண்டிதர் தோன்றிய நாள்

25—பத்மினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:59–10:08

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635019. போன்: (04344) 226222. இ-மெயில்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. போன்: 99949 49108. இ-மெயில்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. போன்: (0422) 2626508/9. இ-மெயில்: bhakti.vinoda.swami@pamho.net www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600041. போன்: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 இ-மெயில்: info@iskconchennai.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600020. போன்: (044) 24456199. இ-மெயில்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636012. போன்: (0427) 2001686, 2345545, 94421 53427. இ-மெயில்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002. போன்: (0462) 2501640. இ-மெயில்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629002. போன்: 98946 00108. இ-மெயில்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001. போன்: (0452) 2346472. இ-மெயில்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632006. போன்: (0416) 2241654, 94429 53417. இ-மெயில்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620006. போன்: 98947 75775. இ-மெயில்: ratishadas@yahoo.co.in

**பாண்டிச்சேரி**—41, 8வது குருக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605011. போன்: 94434 68923, 99408 64086. இ-மெயில்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை. போன்: 93623 10556. இ-மெயில்: adgd.jps@gmail.com

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001. போன்: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600012. போன்: 98400 87067. இ-மெயில்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607803. போன்: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. போன்: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களை தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
# கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம
# ராம ராம ஹரே ஹரே





நாம் கிருஷ்ணரை மறந்து வாழ்வதே நமது வாழ்வின் அனைத்து துன்பங்களுக்கும் காரணம். மறந்த அந்த உணர்வினை மீண்டும் எழுப்ப இந்த ஹரே கிருஷ்ண மஹாமந்திர கீர்த்தனம் உதவுகிறது. சண்டையும் சச்சரவும் கொண்ட இக்கலி யுகத்தில் இந்த மஹாமந்திரத்தை உச்சரிப்பதைத் தவிர வேறு கதியில்லை, வேறு கதியில்லை, வேறு கதியில்லை. 16 வார்த்தைகளைக் கொண்ட மஹாமந்திரம் மட்டுமே கலி யுகத்தின் தீமைகளை அழிக்க வல்லது. இதைத் தவிர வேறு வழி கிடையாது என்பது எல்லா வேதங்களும் கண்ட உண்மையாகும்.

நல்லோருக்கு தீமை விளைவதேன்?
உலகத்தை படைத்தது யார்?
மறுபிறவி உண்மையா?
நானும் கடவுளா?
கடவுளை படைத்தது யார்?
உலகப் பிரச்சனைகளுக்கு தீர்வு என்ன?
ஏன் பல்வேறு மதங்கள்?
உண்மையான குரு யார்?
வேதங்கள் கட்டுக்கதையா?
கடவுளுக்கு உருவம் உண்டா?
உயிர் எவ்வாறு தோன்றியது?
நான் யார்?
நான் ஏன் பிறந்தேன்?
கடவுள் யார்?
உலகம் எப்போது அழியும்?
ஆன்மிகம் சோறு போடுமா?
யோகம் என்றால் என்ன?
நான் ஏன் துன்பப்படுகிறேன்?
உண்மையான சமத்துவம் சாத்தியமா?
கோபத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது?





மனதை அரிக்கும் எல்லா கேள்விகளுக்கும்
அதிகாரப்பூர்வமான பதில்கள்:
தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி
பிரபுபாதரின் புத்தகங்களில்


பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை